

ப. 384 எலும்பு பெண்ணுருவாயது

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு எ } மேய்கண்டான்யாண்டு-எாகூ பங்குனித்திங்கள் 1929ஆ மார்ச்சுமூ—ஏப்ரல்மூ { பரல் ந

சோன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சோல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
போன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே.

உரை :

சொல் லொழுங்கிற் பழகுகின்ற குயிற்கூட்டங்களே நீங்கள் சொல்லீர்களோ? பற்பல வரிசைகளையுடைய வரிபொருந்திய ஒலி வண்டுகள் பண்ணிசை பாடும் பழனவளம் வாய்ந்த திருப்பழனநகரி லெழுந்தருளியிருக்குஞ் சிவபிரானை, அந்திப் பொழுதின் நகையாகிய திங்களென்னும் அரும்பு திகழுஞ் சடைமுடிச் சென்னியையுடைய கொன்றையந்தார் மார்பின் என் னுருயிர்க் காதலன் எனது இளநலத்தை நுகர்ந்தும் இங்ஙனம் இகழ்தல் செய்வானே!

எ, வி௫: 'வரி' யென்பதைப் புள்ளியென்றும் இசையொலியென்றும் இரட்டுற மொழிந்து கொள்க. 'வரி வண்' டென்பது இசைபாடும் ஒருவகை வண்டினை யுணர்த்தும். இவ்வண்டினம் 'வரிக்கடை' யென்றும் இலக்கியங்களிற் கூறப்படும். இதனை 'வரிக்கடைப் பிரசம்' மென்னும் மதுரைக் காஞ்சியினும் அதனுரையினுங் காண்க.

முன்மாலை, இரவுக்கு முன் நிகழும் அந்திப்போது. 'நகு' வென்பதை முதனிலைத் தொழிற் பெயரெனக் கொண்டு 'நகு திங்க' ளென்பதற்குப் பண்பொட்டு விரிக்க. 'சென்னி மார்ப' னென்க. புதுநலம், இதுகாறும் எவரும் நுகர்ந்து காணாத தனது நலம். உண்டு மென்று சிறப்பும்மை விரிக்க.

**மனைக்காஞ்சி யிளங்குருகே மறந்தாயோ மதமுகத்த**
**பனைக்கைம்மா வுரிபோர்த்தான் பலர்பாடும் பழனத்தான்**
**நினைக்கின்ற நினைப்பெல்லா முரையாயோ நிகழ்வண்டே**
**சுனைக்குவளை மலர்க்கண்ணாள் சொற்றூதாய்ச் சோர்வாளோ.**

காஞ்சி, ஒருமரம். முகத்த, குறிப்புப் பெயரெச்சம். நிகழ்வண்டு இறைவன் றிருவடி மலரைப் பற்றும் வண்டு.

'சொல்தூது' என்பதைச் சொல்லே தூதாயென்று உரைத்துக் கொள்க. என்றது, இதுகாறுஞ் சொல்லே தூதாய் வாய்விட்டுக் கூறி வறிதாய் வருந்தியதுபோலன்றி, இனிமேல் நீயேனுந் தூதாகிப் பயன் படுக வென்று வண்டுக்குக் கூறியபடி; இது, குறிப்பெச்சம்.

**வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்**
**பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்**
**அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி**
**குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே.**

பஞ்சி, செம்பஞ்சு; இது நிறத்திற்குவமை; பரந்து, பரவலாய் நிறைந்து; கலி, வினை.

'குஞ்சி' ஆண்பால் மயிர்முடியாதலின், அப்பூதியடிகள் சென்னி மன்னிய சேவடியைக் 'குஞ்சிப்பூ' வென்றார்.

வளை கவர்ந்தான் பழனத்தான்; அவன் அவ்வாறாயினும், அப்பூதிக்கருளும் இறைவனே, நீயேனு மென்னை ஆட்கொள்வாயாக, வென்றாரென்க. பழனத்தானுஞ் சேவடியானும் ஒருவனே யாலோ வெனின், ஈதோ ரன்பு மூதிர்ச்சியின் ஊடற்கூற்று முறை யென்க. கோடியை - கொள்ளுவாயாக வென்றற்கு.

இளவழகனார்.

# சைவ சமயம்

[திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M. A; M. L.]

(முன் ௭௬-ம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள் வழிபாட்டிற்குரிய சடங்குகளின் பொருளுணர்ந்து வழிபாடு இயற்றின் மிகுந்த அன்பு விளையும்; அஃது ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனி, சைவ நூல்களின் இயல்பினைப்பற்றி ஆராய்வாம் "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றதற் கேற்பச் சமய நூல்களும் ஆராயற்பாலன. **காண்டல், கருதல், உரை** என்னும் மூன்று அளவைகள் உண்மை ஆராய்தற்குக் கருவியாவன வென்று **சைவ சித்தாந்த நூல்** கூறுகின்றது. உரைப் பிரமாணம் ஒன்றே போதுமாயின் பிற பிரமாணங்களை நூல்கள் கூற வேண்டியதில்லை. உரைப் பிரமாணத்துள் இடைச் செருகல்களும் மாறுதல்களும் காணப்படுமாயின் அவற்றை **யுத்தி, அனுபவம்** என்னும் பிரமாணங்களால் விலக்கல் வேண்டும். **சிவஞான சித்தியாருள்** 'அருமறை ஆகமம் எல்லாம் அரனடிக் கீழ் அடங்கு' மென்றும் அவற்றை உயிர்கள் தத்தம் அறிவிற் கேற்பப் பிறர்க்கு எடுத்துரைக்கின்றார்களென்றும் கூறப்பட்டது. பல திறப்பட்ட உயிர்கள் வாயிலாக நூல்கள் உலகிற் பரவுங்காலை அவற்றில் குறைபாடுகள் ஏற்படுதல் இயல்பே. குறைபாடுகளை நீக்க வேண்டுமே யொழிய நூல்களை அறவே புறக்கணித்தல் கூடாது. யுத்திப் பிரமாணத்தால் நமது சிற்றறிவு கொண்டு எல்லாவற்றையும் அறிய முடியாது. நம்மினுஞ் சிறந்த அறிவுடையவர்கள் யோகக் காட்சியால் கண்டு கூறிய அரிய உண்மைகளை நாம் நம்புதல் வேண்டும். மேலை நாட்டினரும் ஒரு நூற்றாண்டிற்கு முன் காணாத அரிய நுட்பங்களை இப்போது காண்கின்றார்கள். அவர்கட்கு யோகக் காட்சி மிகவும் குறைந்த நிலையிலேதான உள்ளது. அவர்களினும் விரிந்த நோக்கொடு திகழ்ந்த நம்முன்னோர் அறிந்து இயம்பியவற்றை நாம் என் நம்புதல் கூடாது?

நம்மிற் சிலர், சில புராணங்களுட் காணப்படும் கடவுட் டன்மைக்கு மாறான கதைகளைத் தெரிந்தெடுத்து அவற்றை இகழ் தல் வாயிலாகச் சமயத்தையும் பழிக்கின்றார்கள். சமய உண்மை யுணர்ந்தோர் அவ்வாறு செய்யார். நமது சமய வழிபாட்டிலே **விநாயகர் வடிவம்** கடவுளுடைய ஓங்கார வடிவத்தைக் குறிப்ப தாகும். **முருகன் வடிவம்** கடவுளுடைய ஆனந்த வடிவத்தைக் குறிப்பதாகும். கடவுளைத் தாயுந் தந்தையுமாக வழிபடுகின்றவர் கள் அவனுக்கு ஆண் வடிவும் பெண் வடிவும் அமைத்தல் குற்ற மாகாது. முற்காலத்தில் **சிவசக்தியை** ஆண் வடிவமாக வழி பட்ட முறையே பிற்காலத்தில் **வைணவமாக** மாறிற்று. உலகிற் கெல்லாம் ஒளி கொடுக்கும் **கதிரவனைக் கடவுளின்** வடிவமாகக் கருதுதல் வழக்கமாயிற்று. ஆகவே, **கணபதி வழிபாடு, குமரன் வழிபாடு,** சிவ **வழிபாடு, சத்தி வழிபாடு, திருமால் வழிபாடு, சூரிய வழிபாடு** என்னும் ஆறும் ஆறு உட்சமயங்களாயின. இதனை யறிந்து நம்மவர்கள் சமய ஒற்றுமையை நாடவேண்டும். நடு நிலையில் நின்று சமய ஒற்றுமையைப் பேணுவதே நம்மவர்கள் கடமையாகும். அதற்குச் **சமயக் கல்வி** யாவர்க்கும் அளிக்கப் படவேண்டும். அதுவே சிறந்த அறம். தற்காலத்திலே கோயிலி லும் மடங்களிலும் கூடும் கூட்டங்கள் தோற்றப் பொலிவையும் உணவின் வளத்தையுமே கருதுகின்றார்கள். அச்சமய நிலையங் களில் சமய போதனை யாவர்க்கும் பயன்படும் முறையில் அமைய வேண்டும். நமது திருக்கோயில்கள் நமது உயர்ந்த நாகரிகத்தை யும் கவின்கலைகளையும் (Fine Arts) என்றென்றைக்கும் பாது காத்தற்குரிய இடமாக ஆதியில் அமைக்கப்பட்டன, நம்முடைய பண்டை அரசாங்கங்கள் மறைந் தொழிந்தும் நம்முடைய நாகரிக மானது நிலை பெற்றிருப்பதற்குக் காரணம் நம்முடைய கோயில்கள் நிலைத்திருப்பதே. நமது கோயில்களில் **சிற்பம், ஓவியம், இசை, பாட்டு, நாடகம், நாட்டியம்,** முதலியன யாவும் இன்னும் நிலவு வதை நாம் அறிவோம். இவைகள் செவ்வையான முறையில் பாது காக்கப் படவேண்டும். அவைகளிலுள்ள குறைபாடுகளை ஒழித் தல் வேண்டும்.

நம்முடைய ஆலயங்களிலே **சமய அறிவினை** வளர்த்தற்கு

முன்னோர்கள் செய்த ஏற்பாடுகள் இப்போது நிலை பெறவில்லை. அங்ஙனம் நிலை பெறுமையால், திருக்கோயில் சென்று வழி படுவாருட் பலர் மூடபத்தி யுடையராய்க் காணப்படுகின்றார்கள். சமயத்திற்கு முரணான பல நிகழ்ச்சிகள் நமது ஆலயங்களிலே நுழைந்து விட்டன. சமயத்தைச் சாராதவர்க்கு உணவளித்த லும், ஆலயச் சடங்கு முறைகளைத் தீர்மானிப்பதற்கும் நடத்து வதற்கும் உரிய அதிகாரம் கொடுத்தலும் சமய முறைப்படி வழி பாடு நடத்தாமையும் ஏற்பட்டு விட்டன. சமய வுணர்ச்சி குன் றிச் சாதி பற்றிய உயர்வு தாழ்வுகள் ஆலயங்களில் நிலைபெற்றமை தான் இக்கேடுகளுக் கெல்லாம் காரணமாகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளென்று வழிபடக் கருதாதவர்களாய்ச் சிவனடி யார்களைச் சாதி பற்றி இழித்துக் கூறும் சுமார்த்தப் பிராமணர் களைச் சைவருள் பெரியாராக மதித்து அவர்களை **விதிவிதாயகர்க ளாக** நியமிப்பதால் அவர்கள் சுமார்த்தக் கொள்கைப்படி சிவால யங்களில் நித்திய நைமித்திக பூசைகளைத் தீர்மானித்து நடத்தி விடுகின்றார்கள். அப்படிச் செய்தல் முற்றிலும் ஆகம விரோதம். ஆதலால் சிவாலயங்களிலே சிவாகம முறைப்படி சிவதீக்ஷை பெற் றுச் சைவக் கொள்கைகளை மேற்கொண்ட **ஆதிசைவர் சைவர்** முதலியோர்களையே **விதிவிதாயகராக** நியமிக்க வேண்டும். உடம் பைப்பற்றிய சாதியினும் உயிர்க்கு உறுதி பயக்கும் **சமயமே** பெரி தாகையால் சைவ சமயத்திற்குரிய உரிமைகளையும் அதிகாரங்களை யும் சிவாலயங்களிலே சுமார்த்தர்களுக்குக் கொடுத்தல் பெருந்தவ றாகும். சமயத்தைக் கை விட்டுச் சாதியைப் பேணுதல் சமய வளர்ச்சியை முட்டுப் படுத்துவதாகும். சைவரல்லாத பிராமணரி னும் சைவராகிய பிராமண ரல்லாதாரே சிவாகமப்படி நடக்கும் சிவாலயத் திருத்தொண்டுக்குச் சிறந்த உரிமை யுடையவர்கள்.

இனி, இப்பொழுது கிடைத்துள்ள சிவாகம ஏடுகளிலே சைவத்திற்கு முரணிய கொள்கைகளும் பிற்காலத்தாரால் புகுத் தப்பட்டுள்ளனதாகத் தெரிகிறது. சைவ சமயம் அருளொழுக் கத்தை வற்புறுத்துதலின் உயிர்ப்பலி சிவாகமங்களிற் கூறப் படுதற் கிடமில்லை. உயிர்ப்பலியைச் சொல்லும் ஆகம வாக்கியங் கள் கடவுளுடைய வாக்காக மாட்டா? ஏனெனில் கிரியாகாண்ட

மெல்லாம் ஞான காண்டத்திற்கு ஒத்த முறையில் அமைந்திருக்க வேண்டும். ஞான காண்டத்திற் கூறப்படும் உண்மைகளை விளக்கிக் காட்டவும் நினைவூட்டவுமே கிரியைகள் ஏற்பட்டுள்ளன. ஆதலால், சமய உண்மைக்கு மாறான கிரியைகளைத் திருக்கோயில்களில் நடத்துதல் தவறாகும். அவைகள் ஆகமக்கிரியா காண்டத்தில் விதித்திருந்தாலும் அவை ஆகமத்தின் உண்மைப் பகுதிகளாகா வென்றே கொள்ள வேண்டும். ஞான காண்டக் கருத்துக்கள் தமிழிலேயுள்ள சித்தாந்த நூல்களிலே தெளிவாகக் காணப்படுதலால், கோயிலில் கிரியை நடத்துகின்றவர்கள் தமிழ்ச் சித்தாந்த நூல்களில் வல்லவர்களாயிருத்தல் வேண்டும். வடமொழியில் ஆகமக் கிரியா காண்டமே பெரும்பாலுங் கிடைக்கின்றது. அறிஞர்களும் செல்வர்களும் ஒருங்கு கூடி எல்லா ஆகமங்களையுஞ் சேகரித்து அவற்றின் கிரியா காண்டங்களை ஞான சாத்திரங்களுடன் ஒத்துப் பார்த்து விலக்க வேண்டியவற்றை விலக்கி கொள்ள வேண்டியவற்றை இன்னவென்று தீர்மானித்து அவற்றைத் தமிழில் அமைத்துக் கொள்ளுதல் இக்காலத்தில் இன்றியமையாத கடமையாகும். கடவுள் வழிபாட்டைப் பலர் இக்காலத்திலே குறை கூறுவதற்குக் காரணம் இப்பொழுதுள்ள சமயக் கிரியா நூல்கள் செம்மையில் அமைக்கப்படாமையே யாகும். ஆதலால் அவற்றை ஒழுங்குபடுத்துகின்ற முயற்சியினை நம்மவர்கள் விரைவில் மேற்கொள்ளவேண்டும். தமிழிலுள்ள **திருக்குறள், பன்னிரு திருமுறை, மெய்கண்ட சாத்திரம் பதினான்கு** என்னும் அருள் நூல்களைப் பழுதுபடாமற் பாதுகாப்பது நம்மவர்கள் கடமையாகும்.

**கடவுள் வழிபாடு** ஆலயங்களில் செவ்வையாக நடப்பதனாலேயே சிவபத்தியும் அடியார் பத்தியும் எவ்வுயிர்க்கும் இரங்குந் தன்மையும் நிலைபெறும். அது

'ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்
பேசுவதென் அறிவில்லாப் பிணங்களைநாம் இணங்கிற்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ

ஆசையொடும் அரனடியா ரடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்கரும மாகச் செய்து
கூசிமொழிந் தருண்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே.

சிவஞானசித்தியார்

என்றமையால் சிவனடிப் பேரன்பே அடியார் பத்திக்குக் காரணமென்றும், அஃது அருளொழுக்கத்திற்குக் காரணமென்றும், அதுவே ஒவ்வொருவர்க்கும் உயிர்க்கு உறுதி பயப்பதென்றும் அறிந்து அத்தகைய அன்பில்லாதாரோடு கூடுதல் பிறவித் துன்பத்திற்கு ஏதுவாகும் என்பது தெளிக. அன்பின் சிறப்பே சமயத்தின் உயிர் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து வேண்டுவன விரைவிற் செய்ய வேண்டும்.

---

# கருமை

(திருக் கபசம் அவர்கள்)

சின்னாளாகச் செல்விக்கு ஒன்று மெழுதக்கூடாமற் போயிற்று. செல்வியின் வளர்ச்சிக்கு முன்னின்றுழைப்பவரு ளொருவர் யாதாயினு மொன்றுபற்றி எழுதவேண்டுமென்று பன்முறை எனைத் தூண்டிவந்தார். 'யாதுபற்றி எழுதுவதென்று ஆராய்ந்து வருகிறேன்' என்றவர்க்குப் பதில் விடுத்தபின், ஓரிடத்திலுட்கார்ந்து, வெறுந்தாளை முன் வைத்துக்கொண்டு ஊற்றெழுதுகோலைக் கையிற் பிடித்தவண்ணமாய் நினைவிலாழ்ந்தேன். எதற்காக உட்கார்ந்தேன் என்பதை மறந்துவிட்டு, எழுதுகோலைக் கவலையின்றிக் கையாடியதால், இரண்டு மூன்று மைத்துளிகள் தாளில் விழுந்து எனது கண்ணைக் கவர்ந்தன. "தாளில் விழுந்த கருமையே, நீயே இக் கட்டுரைக்குத் தலைப்பாகுக" என்று கருமையைப்பற்றி எழுதலானேன்.

பச்சை மஞ்சள் முதலிய அழகிய பல நிறங்களிருக்க, அவற்றைவிட்டுக் கருமையைப் பிடிப்பது, 'வேம்பன்றோ காக்கை விரும்பும் கனி'? என்பது போலன்றோ விருக்கிறது என்று நினைப்பவர்

நினைக்க ; அதனாற் குற்றமில்லை. காக்கைக்குங் கருமைக்கு மொரு பொருத்த மிருப்பதுபோல், எனக்குங் காக்கைக்கு மொரு பொருத்த மிருப்பதால்தான் கருமையைப்பற்றி எழுதுகிறேன். காக்கை என்றென்னை நீங்கள் கருதிடின் அதற்கு நான் எள்ளளவும் வருந்தேன். காலையில் எழல், சுற்றத்தோடுண்ணல், மாலையிற் குளித்தல் முதலிய பல நல்லொழுக்கங்கள் காகத்தினிடமுண் டென்பதை முன்னோர் நன்கறிந்தார். எனக்கு இத்தகைய ஒழுக்க முண்டென்று சொல்ல வியலாது. ஆனால், நிறத்தில் எனக்குங் காக்கைக்கு மோரளவு ஒற்றுமையுண்டு. இத்தகைய நான் செம் மையையும் பசுமையையும்பற்றி எங்ஙனமெழுதுவது?

ஏறக்குறைய எட்டு வயதுள்ள ஒரு கருஞ்சிறுமி, தெருவிற் போய்க்கொண்டிருக்கையில், பதினாறு வயதுடைய செக்கச்சிவே லென்றிருந்த ஒரு இளமகன் அவளைப் பார்த்து, "கரிக்குட்டீ எங்கே போகின்றாய்?" என்று கேட்டான். அவளவனைச் சீறிப் பார்த்து என் கருப்பு உன் கண்ணிலே, என்று சொன்னபின், இடதுகாலைத் தூக்கி உள்ளங்காலைக் காட்டி, "உன் சிவப்பு என் காலிலே" என்று விடைபகர்ந்து, பிடிபோல நடந்து சென்றாள். பிடி என்பது யானை, யானையைக் கரி என்பர். கரிக்குட்டி கரிக் குட்டியைப்போல் நடந்ததிலென்ன வியப்பிருக்கிறது!

மொய்குழலும் நீள்விழியுங் கருத்துத் தோன்றும் மங்கைய, ரழகுடையரெனத் தொன்றுதொட்டுக் கருதப்பட்டு வருகின்றனர். பெண்ணிற்கேயன்றி ஆணிற்குமிது அழகென்று கொள்ளப்படுகின் றது. கண்ணிலு மயிரிலுமன்றிக் காதிலு மூக்கிலுங் கருமையைத் தாங்குதல் மறுவென்று கருதப்படுகின்றது. கருநிறமுடைமை, கீழ்மைக் கறிகுறியாகுமென் றெழுதிவைத்த நுண் புலமையோரு முளர். ஆண்கள் கருநிறமுடையரா யிருத்தல் குற்றமெனின், பெண் கள் அந்நிறத்தைத் தாங்குதல் பெருங்குற்றமாகின்றது, கருத்த பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடுவதன் வருத்தமே இதற்குப் போதிய சான்றாகும். இருளர் என்று இசைபடக் கூறத்தக்க நற் கருப்பேறிய ஆண்மக்களும், கரியமால் காட்டிய வழியில் நின்று, திருமகள்போலச் சிவந்திலங்குங் காரிகையனீரக் கடிமணஞ் செய விழைகின்றனர். இது தகுதியுடைத்தாயின், குழலு முகமுமொக்

கக்கருத்த மங்கையர், மலைபரையன் மகள் காட்டிய வழியைப் பின் பற்றி, பவளக்குன்றனைய சிவனைப்போன்ற நன்மகனை விழைவதுந் தகுதியேயன்றோ? ஆனால், முற்குறித்த ஆண்கருப்பும் பெண்சிவப் புங் கூடுவதுபோல் பிற்குறித்த பெண்கருப்பும் ஆண்சிவப்பும் பெரும்பாலு மிணைவதில்லை. இஃது ஆராயற்பாலது, நிற்க.

சின்னாட்களுக்குமுன் சென்னைவந்த சைமன் குழுவினரை (Simon commission) ஒரு சாரார் கருப்புக் கொடிகளுடன் வர வேற்றனர். விரும்பாதவரைக் கருப்புக் கொடிகாட்டி வரவேற்றல் மேனாட்டு வழக்கம். கருமையை மேனாட்டார் இழவிற்கு மிடும் பைக்கு மறிகுறியாக ஆள்கின்றனர். இந்தியாவிலுந் தமிழ்நாட் டிலுங் கருமைக்கு அத்தகைய பொருளில்லை என்று பலர் நினைக்க லாம், அங்ஙனமன்று; இறப்பிற்குங் கருப்பிற்குந் தொடர்பு இங்கு முண்டு.

தென்திசைக் கடவுளென்று நூல்களிற் கூறப்படுங் கூற்றுவன் உயிர்களினிறுதியை யறிந்து வந்து அவைகளைத் தன்னொடு கொண்டு செல்கின்றானென்று பன்னூற் றாண்டுகளாய்த் தமிழ்நாட் டிலொரு நம்பிக்கை யிருந்து வருகின்றது. இத்தகைய கூற்றுவ னொருவனுளனோ இலனோவென்று துணியப் புகுவது எடுத்துக் கொண்ட பொருளுடன் பொருந்துவதன்று. கூற்றுவனொருவ னுளனென்ற நினைவு இக்காலத்தும் பலருக்குண்டென்பதை மறுத் தலரிது. மார்க்கண்டனென்ற இளைஞனுயிரைக் கவரவந்தனொன்று முக்கணனாற் கூற்றுவனுதைபட் டஞ்சியொடுங்கி நிற்கு மோவிய மொன்றுளது. இதிலக்கூற்றுவன் கருநிறமுடையவனாகத் தோன் றுகின்றான்; இந்த ஓவியக் கருத்து இலக்கியங்களினின்றும் பெறப் பட்டதாகும். உயிருடலைவிட்டு நீங்கு நிகழ்ச்சியாகிய சாவை விளைப் பதையே தன் தொழிலாகக்கொண்ட ஒருவனுக்குக் கருநிற மமைத்ததிலிருந்து, கருப்பிற்கு மிறப்பிற்குமொரு தொடர்புண் டென்பது எளிதில் விளங்குகின்றதல்லவா? இத்தொடர்பு இன் னும் வலியுறும்பொருட்டுக் கூற்றுவனைக் காரெருமை மேலேறியவ னாகக் காண்கின்றோம். கிறித்தவ ஓவியங்களிலும் நரகையாளும் உர் வோனைக் கரியனாகவே தீட்டுகின்றனர். இதனாற் கருமைக்கு மிழ விற்குந் தொடர்பு மேனாட்டில் மாத்திரமின்றிக் கீழ்நாட்டிலு

முண்டெனத் தெரிகிறது. தென்னாட்டில் விளைகின்ற பருத்தி, எட்டிக்கொட்டை முதலியன இங்கிலாந்திற்குச் சென்று வேறுருவம் பெற்றுப் புதுப் பெயருடன் நமது நாட்டிற்குத் திரும்பி வருவது போல், கருமையைப்பற்றிய இழவுக்கருத்து, முதலிற் கீழ்நாட்டிற் றோன்றி, மேனாடுகளுக்குச்சென்று, இப்பொழுதங்கிருந்து, கருப்புக் கொடி பிடித்தல் முதலிய வழக்கங்களின் வாயிலாய்த் திரும்பி வருகின்றதென்று கொள்ளக் கிடக்கின்றது.

கருமையு மிருளுமொன்று. இருளைக் கருக்கல் என்று சொல்லுமொரு வழக்குண்டு. கூற்றுவனு மவனூர்தியுங் கருப்பாயிருத்தலோடு அவன் நாடு மிருளடைந்திருப்பதாகக் கூறுகின்றனர். ஒருவர் உயிர் நீத்தபோது அவர்கள் எங்கு செல்வர் என்ற திண்ணமான நினைவு முன்னுள் மக்களுக் கில்லாதிருக்கலாம். அறிவு செல்லாதவிட மிருளாதலின், இறந்தோர துயிர்போ யடையுமிடத்தை இருள் செறிந்த நாடாக அவர்க ளெண்ணி யிருக்கக்கூடும். இருளில் நிறங்கள் மறைந்து போவதுபோல், இறந்தவர் உயிர் இன்னதென் றுணரலாகாத ஒரு நிலையை எய்துகின்றதென்று தொல்லுலகிலிருந்த மக்கள் நினைந்து கருமையை இறப்பிற்குரிய நிறமாகக் கொண்டிருக்க வேண்டும். இது இந்நாளளவும் மேனாட்டாரின் வழக்கங்களிற் கையாடப்படுகின்றது. அன்பிற்குரியவ ரொருவிறந்தனராயின், அவரது நண்பரு முறவினருங் கரிய உடையை யணிந்து கொள்கின்றனர். உயிரொடுங்கிய உடலை எடுத்துச் செல்லும் வண்டிகளும் கருநிறமுடையனவா யிருக்கின்றன; ஒருவர் உயிர் நீத்த செய்தியைத் தெரிவிக்குந் தாள்களில் கருப்புக் கோடிடப்படுகிறது. இதைப் பின்பற்றி நமது நாட்டிலுள்ள திங்கள் வெளியீடுகளிற் சிலவும், நாள் வெளியீடுகளிற் பலவும், உயர்ந்தோர் இறந்த செய்தியைக் கருங்கோடிட்டு அச்சிடுகின்றன. இவ்வெளியீடுகளி னாசிரியர் கருங் கோடிடுவதன் பொருளைக் கருதிடுவரேல் அங்ஙனம் செய்யார்.

இறந்தவரெல்லா மிருளிற் புகுகின்றனரெனுங் கொள்கை இக்காலத்தில் மறைந்துவிட்டது. இறப்பென்றது அஞ்சி நடுங்கத் தகுந்ததொரு நிகழ்ச்சி என்ற எண்ணம் பெரும்பாலான மக்களுள்ளத்திலிருப்பினும், இறந்தவரெல்லாம் நிரயத்திற்குச் செல்கின்று

ரென்று நினைக்குமாறில்லை. உயிர் நீத்தோரைக் குறித்து, அவர் "விண்ணுற்றார்," "இறைவன் திருவடி நிழலடைந்தார்," என்று சொல்வதும் எழுதுவதுமாகிய பழக்கங்கள் பெரிதும் ஆளப்படுமிக் காலத்தில், உயிர் துறந்தாரைக் கருமையுடன் புணர்த்தி நினைப்பது விந்தையையும், வெறுப்பையு மொருங்கே யுண்டாக்குகின்றது.

ஒளித்துச் செய்யுஞ் சில செய்திகளால் மக்களுக்குத் தீமை செய்ய முயலுந் தொழிலொன் றுண்டென்று பலர் நம்புகின்றனர். சில மறைமொழிகளி னுதவிகொண்டு இது செய்யப்படுகிற தென்பர். இங்ஙனம் பிறர்க்குக் கேடு சூழுந் தொழிலை ஆங்கிலத்தில் (Black magic) என்பர். கருமாயம் என்று இதைத் தமிழிற் சொல்லலாம். கருவென்பது வயிற்றிலிருக்குங் குழந்தையைக் குறிக்குமாதலாலும், உயிரு முடலும் நிறைவு பெறாத அக்கருவை எடுத்து நமது நாட்டிலுள்ள ஏவல் தொழிலாளர் (மந்திரவாதிகள்) தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகின்றனரென நம்பப்படுவதாலும், கருமாயம் என்பது இருபொருள் பெறுவது காண்க. இவற்றில் கருவைக்கொண்டு செய்யும் மாயமென்பதை அகற்றிவைத்து, ஆங்கிலத்தில் கூறுகின்றபடி கருப்பு மாயம் என்ற பொருளை எடுத்துக்கொண்டு சிறிது ஆராய்வாம்.

(மந்திர) மாயத்திற்குங் கருமைக்கு மெந்தவகையி லொற்றுமையுளது? இக்கேள்விக்கு விடையாக மற்றொரு கடாவைக் கொடுக்கலாம். அஃதென்னெனின், மாயம் பயில்வோர், திங்களில்லா நல்லிருளை (அமாவாசையை)த் தங்கள் செய்திகளுக்கு நல் வேளையாகக் கொள்வதேனோ? என்பதே. இஃதன்றி, கரிக்குருவி, கருங்குரங்கு, கரும்பூனை, கருங்கோழி முதலியனவும், கருஊமத்தை கருநொச்சி ஆகிய செடிகளும் மாயப்பயிற்சிக் குறுதுணையாய் நிற்கின்றன. மற்றும் ஏவல் செய்கின்றவர் குட்டிச்சாத்தான் (சைத்தான்) முதலியவற்றை உருக்கொடுத் தமைக்கும்போது கருப்புத் துணியினால் பொம்மை செய்வதை யாவருமறிவர். ஏவல் தொழிலை ஆங்கிலர் (Black magic) என்றதற்கு ஏற்ற சான்றுகள் நமது நாட்டிலன்றோ காணப்படுகின்றன?

(தொடரும்)

---

# உண்மை காணல்

[திரு. அ. சிதம்பரநாதனவர்கள் B. A.,]

(கூக-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலின் கருத்திற்கிணங்க ஆறுகள் பலவும் "மனிதர்காள்! எம்மிடத் தோடுநீரற்றவிடத்தும் ஊற்று நீரான யாமுமக்குதவ வில்லையா! அதுபோல நீவிர் பொருளற்றவிடத்தும் இயைந்த வளவு ஏன் பிறர்க்குதவலாகாது? யாமாண்டாண்டுதோறும் இடு மேடு மடுவும் போன்றதல்லவா உமது செல்வம்! எம்மிடத்துத் தோன்றுங் குமிழிபோலும் வானத்திடைத் தோன்று மின்னலைப் போலும் நிலைத்தலில்லாத செல்வத்தை உடாது முண்ணாது மும் முடம்பு செற்றுங் கெடாத நல்லறமுஞ் செய்யாதும் உய்த்தீட்டி யிழக்குந் தேனீயைப்போன்று கொன்னே காத்தே னிழக்கின்றீர்? எம்பாலோடும் நீர் மேற்கிருந்து கிழக்கும், வடக்கிருந்து தெற் கும் செல்லுமேயானால் அந்நீர் மீண்டுங் கிழக்கிருந்து மேற்கும், தெற்கிருந்து வடக்குந் திரும்புவதில்லை. அதுபோல உமது வாழ் நாட்களிற் சென்றநாள் பின்னும் மீளா என்னு முண்மையை யறிந்துகொண்மின்! கொன்னே காலங் கழியன்மின்!! நீவிர் ஈர மில் நெஞ்சினராய் அன்பு மறனுங் குன்றியவராய் எம்மிடத்து வந்து நீராடி லென்பயன்? உம்மினும் பல நாழி எருத்துகள் எம் மிடத்துவந்து கிடக்கின்றன. எம்மிடமே பிறந்து எம்மிடமே வாழும் மீன் முதலே முதலியன எம்மை விட்டு நீங்காமல் எம்மிட மே யிருக்கின்றன. நீராடுதலொன்றே போதுமெனின், அவற்றை விட நீவிர் உயர்ந்தோராகமாட்டீர், உள்ளன்பொன் றும்மிடமிருக்கு மேல் அதுவே உம்மை யுயர்த்தி நிறுத்தும். "கங்கை யாடிலென், காவிரியாடிலென், ஓதநீர்க் கடலாடிலென், எங்கு மீசனெனுதவர்க் கில்லையே" அவற்றானுயபயன் என்பதை யறிமின். எம்மைக் கடக்க விரும்பும் நீவிர் தோணியியக்குவோன் கீழ்ப்பாலொருவனென்று கருதாது அத்தோணியிலேறிச் செல்லுதல்போல அறிவுப் பெருக் கத்தில் நீவிர் விருப்பமுற்றிருப்பீராயின், கற்றேனைக் கீழோனென் றும், தாழ்ந்தோனென்றும் நினையாது அவனைத் துணையாகக்

கொண்டு கல்வி கற்பீராக! எம்மைச் சேர்ந்த ஊரங்கணநீர் (சாக்கடைத் தண்ணீர்) புனிதமடைவதைப் போன்று கல்வியில்லாதவரேயாயினும் நீவிர் கல்விவல்ல நலமாட்சி நல்லாரைச் சேர்வீராயின் பெருமை பெறுவீர்" என்று பல நுண்பொருள்களை யடக்கிக் கூறுவதென்னே வியப்பு!

நிலமானது "என்னை வெட்டுவோரையும் நான் தாங்குவதுபோல் உம்மையிகழ்வோரையும் நீர் பொறுக்கவேண்டும்" என்றும், கல்லானது "பிறர் இருக்கவும், கிடக்கவும், நிற்கவும், நடக்கவும், ஓடவும் நானிடந்தருதலின், உம்மினுநானல்லன், நீர் பிறர்க்குதவாதிருப்பீராயின்" என்றுங் கூறுவதாகக் கொள்க. மரங்களுட் சிறந்த ஆலமரம் பின்வருமாறு கூறும்:—"கோடைக்காலத்தில் என்னையடைந்தவர்கட்கெல்லாம் நான் வெயிலிற் காய்ந்துகொண்டு நிழல் தருதல்போல நீவிரும் உம்மையடைந்தவரைக் காத்து வாழவேண்டும். சின்னஞ் சிறுவித்திலிருந்து கிளம்பி நாளோங்கி வளர்ந்து இறப்ப நிழற்றருதல்போல உம்மால் செய்யப்படும் சிற்றறமும் பயனளவில் வானமுஞ் சிறிதாமாறு பெருத்து நிற்கும். ஆதலால் எதையு மற்பமென்று நினைத்துத் தள்ளாதீர்; எவரையுஞ் சிறியரென்றெண்ணி எள்ளாதீர். என்னிடத்தெழுந்த விழுதுகளெல்லாம் என்னைத் தாங்குதல்போல, நீவிரும் உம்மைப் பெற்றோரைப் பேணுமின்! "பெற்றதனாலாயபயனென்கொல் மக்கடம் பெற்றோரைப் பேணா ரெனின்!"

இளைதாகக் கொல்லப்படாத முள்மரம் காழ்த்தவிடத்துக் களையுநர் கையைக் கொல்லுவதேபோன்று இளமையிலேயே தீயவை விலக்கப்படாவாயின் முற்றியபின் தமர் பிறரெல்லோரையும் நம்மைவிட்டு விலகச் செய்து நம்மைக் கேட்டுக் குள்ளாக்குமென்பதை யறிந்து கோடல்வேண்டும். சிறுபகை தோன்றியவிடத்தே வேந்தனதைக் கொல்லானாயின் அப்பகை யவனையே கொல்லும். கழனியிற் றோன்றிய களை வெட்டாது விடப்படின் பைங்கூழையே அழித்து விடுதல் போன்று நாட்டிலுள்ள கொடியார் கொல்லாது விடப்படின், வேந்தனையே அவர் கொன்றுபோடுவாராதலால் கொடியோரை யொறுத்தல் வேந்தன் கடன்.

கயப்பூபோன்று முன்மலர்ந்து பிற் கூம்புவார் கேண்மை சிறந்ததன்று. கோட்டுப்பூபோன்று மலரின் பின் கூம்பார் கேண்மையே சாலச் சிறந்தது, தண்ணீர் பாதிரிப்பூவின் புத்தோடுகளைச் சேரின் நறுமணம் பெறுவதேபோல கல்லாதவருங் கற்றோரைச் சார்ந்தொழுகின் நல்லறிவின் நாளுந் தலைப்படுவர். மலரினுடைய நீட்டமு மழகும் செடிக்குப் பாய்ச்சப்படும் நீரைப் பொருத்திருத்தல்போல ஒருவனுடைய பீடும் பெயரும் அவன் எடுத்துக் கொள்ளும் ஊக்கத்தைப் பொருத்தது. பனையின் வற்றிய ஓலையே சலசலக்கும்; பச்சோலை ஒலிக்காது. அதுபோலவும் நிறைகுடம் நீர் ததும்பாதது போலவும் அறிவிற் செறிந்தோர் ஆகுல நீர்மையராயிரார். அறிவு நிறைந்தோரை யறிய வழியிதுவே, பூவிற்குப் புல்லிதழிருப்பதுபோலவும் நீருக்கு நுரையிருப்பதுபோலவும், நெல்லுக்குமியிருப்பதுபோலவும் மனிதர்க்குக் குற்றமுண்டு. அற்றூர் நவையென்றற் காருமிலராதலால் குற்றத்தை நீக்கி எங்கணுங் குணத்தையே கொள்ளவேண்டும். இலைகளான் மறைந்து கிடக்குங் காய்களையும் பறித்துக் கொள்வதுபோல புலவர்வாக் கடக்கத் தான் மறைந்து கிடக்கும் நுண்ணிய பொருள்களையு மறிந்து கொள்ளவேண்டும். முற்றியிருக்குங் கனிகளே கனிந்து விழுவனவாயிருந்தாலும் தீவளியால் நற்காயுதிர்தலுமுண்டாதல்போல வயது முதிர்ந்தோரேயன்றி இளைஞர்களு மிறத்தலுண்மையின், பின்னறிவாம் நல்வினை யாமினைய மென்னாது கைத்துண்டாம் போழ்து கரவா தறஞ் செய்யவேண்டும். அடுத்தடுத்துப் பல காய்கள் காய்ப்பினும் அவைகளைப் பொறுக்கலாற்றே னென்னு மரக்கிளைகளில்லாதனபோல அடுத்தடுத்துப் பல சுற்றத்தார் சூழினும் அவரைத் தாங்க வியலாதென்று கூறாது பேணுவோனே நல்லாண்மகன். இனிய கனியிருக்க உவர்க்குங் காயை விரும்பியுண்ணுதல்போல இன்சொற்களிருக்கவும் வன்சொற் கூற முற்படலாகாது. ஆயினும் இனிய கனிகளுமிருப்பக் காயைக் கவரும் நிலைமையுமுண்டு. நோயுறின், இனிய கரும்பிருப்பினும் கைக்கும் வேம்பையே தின்பதுபோல பிறர் தீ நெறிக்கண் செல்லலுறின் இன்சொற்கூறித் திருத்த வியலாதாயின் வன்சொற்கூறியாகிலும் அவரைத் திருத்த முற்படவேண்டும்.

கரும்பை நுனியிலிருந்து அடிநோக்கித் தின்று சிறிதுசிறிதாகச் சுவை மிகுதியாக அடையப் பெறுதல்போலச் சான்றோராற் கூறப்படுங் கடுஞ் சொற்களை முதலிற் பெற்று நாளடைவில் அவ ரிணக்கத்தால் வரும் பெருமையையும் இன்பத்தையும் அடைய முயலவேண்டும். இனிய கரும்பிற் பூத்த பூ நறுமணம் பெறாததால் விரும்பப்படுதலில்லை யாதல்போல, ஒண்குடியிற் பிறந்தவரேயாயினும் நல்லொழுக்கமில்லாதிருப்பாரேல் அவர் சான்றோரால் விரும்பப்படமாட்டார். கரும்பு யாவர் தின்றாலு மினிக்கும்; வேம்போ யாவரே தின்றாலுங் கைக்கும். அதுபோலத் தக்காரும் அல்லாரும் அவரவர் பெற்றியிற் கோட்புதலில்லை. கரும்பை நன்றாயடித்தாலும் இனிய் சாறே அதனின்று வெளிப்படுதல்போல நல்லோரைப் புடைத்தாலும் அவரிடமிருந்து இன்சொல்லே வெளிவரும். கரும்பிலிருந்து வரக்கூடிய சாற்றை யெடுத்துக்கொண்டபின் சக்கையை விட்டுவிட மனம் வருந்தாததுபோல இவ்வுடம்பினால் பெறற்குரிய அறம்பொருளின்பத்தைப் பெற்றுக்கொண்டபின் இவ்வுடலைவிட்டு விட்டோட வருந்தோம். ஆகலின், அறநெறியிலேயே பொருளீட்டி அதனால் வருமின்பத்தை நாமுந் துய்த்துப் பிறரையுந் துய்ப்பித்தல் நமது கடமையாகும்.

வேம்பிற் கனிய வைப்பினும் வாழைப்பழம் கைக்காதினித்தல்போலச் சிறியோருடன் கூடியிருக்கநேரிடினும் பெரியோர் சிறுமையுறாது பெருமையுடனேயிருப்பர். அப்பெரியார் இல்வாழ்வாரேயாயினும் தாமரையிலையில் நீரொட்டாதிருத்தல்போலப் பற்றாத வாழ்க்கையுடையராவர். இதுவே அவர்தம் பெருமையை நிலை நாட்டுவது.

(தொடரும்)

# புகழேந்தி—செந்தமிழ் நாடகம்

(இதன் உரிமை யாக்கியோற் குரியது)

(திரு. அ. நடராஜ பிள்ளையவர்கள்)

(கரு-ம் பக்கத் தொடர்ச்சி)

## இரண்டாவதங்கம்—இரண்டாங் காட்சி

**இடம்:**—சோழன் கொலுக்கூடம்; காலம்-முற்பகல்.

**நடர்:**—ஒட்டக் கூத்தர்; வேலையர், ஆறுமுக வேளான், கருப்பனுசாரி, வெள்ளையனுசாரி, கண்ணன், நல்லான், பெருமாள் பிள்ளை, அங்கணனுசாரி, வீரத்தேவன், நல்லமுத்து, நகைமொழி நாவலன், மணிவணன்.

(ஒட்டக்கூத்தர் முதலியோர் கொலுவிருக்க)

(நிலைமண்டில வாசிரியப்பா)

**ஒட்டக்கூத்தர்:**— (வேலையரை நோக்கி)

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல புகழ்சா லமைச்சே!
கவிக்கர சாமெனைப் புவிக்கர சாக்கிய
குலோத்துங்கக் கோவைப் போலவே பண்பார்
வலோத்துங்க மன்னை மாநிலத் தறிவிரோ?
அன்னான் றன்னை யென்னுக் கொண்டு
புகழுமா றறியேன்! புவிதனின் யானே.

**வேலையர்:**—படிதனி லொப்புமை பகரொணுப் புலவீர்!
மிடிதீ ரெங்கண் மேலவன் விளங்கக்
கலைமுழு துணர்த்திய கணக்காய ராகியும்,
அலைதரு மாட்சியை நிலைநிறுத் தியதோ
ரச்சாணி யன்ன வழியாப் புகழ்பெறு
மெச்சா ராற்றலாய் விளங்கியு மெழுந்தருள்
குலதே வாமுமைக் கொண்டர சாக்கிய
திலென்ன வியப்பு? யாது மின்றே.

நகைமொழி நாவலன்:—
வியப்பென்? எண்களில் வெளிப்படை யாகிய
விரண்டோ டிரண்டினை யிணைத்தாற் றேன்றும்
முரணுறு நான்கினு மொழியொணு வியப்பே !

ஒட்டக்கூத்தர்:—(வேலையரை நோக்கி)
ஆமாம், அமைச்சே ! ஆயினு நாமினி
யேம மிவ்வுல கெய்திட நாடொறு
முழைத்திடல் வேண்டும் நெருந லொருசில
பழையநங் குடிகள் பணிவா யென்னிடம்
வந்து மிகப்பலர் வாழ்க்கைக் குரிய
நந்தலி னெறிகளை நாடுத லின்றி
மடிமை யென்னுங் கொடியோற் கடிமையாய்ப்
புலவர் வடிவம் பூண்டுநந் நாட்டில்
அலகைபோற் குடிகளை யாட்டுவிப் பதுவாய்
முறையிடக் கேட்டனன் அம்முறை யீட்டை
விரைவினி னீக்கா விட்டால், நாட்டிற்
சோம்பலா மடந்தை துடியெடுத் தாடுவள்.
ஆகலின், நம்முடை யரும்பெறற் சூழ்ச்சி
யாதென வோதுவீர், தீதுதீ ரமைச்சே!

நகைமொழி நாவலன்:— (தனக்குள்)
வந்ததா சூழ்ச்சி! வறியர்க டமக்கு
நொந்திடு வீழ்ச்சி நூற்றினு மிகுமே.

வேலையர்:—புலவர் பெருமான்! புகன்றவை யனைத்துங்
கலப்பிலா வுண்மையே கழறவும் வேண்டுமோ?
யானுமிப் போலிப் புலவர்க ணயப்பாற்
றேனீ நடுவண் சிக்குண் டவனை
மானத் துன்ப வகையெலாம் பட்டேன்.
ஆகவே, இதனை யம்புவி யதனிற்
போகவே துடைக்கப் போற்றினே னும்மை
ஆனல், ஒருதடை யடக்கு நம்மை
மாணு ரைப்போன் மயக்குமிப் போலிப்

புலவரை யருங்கவிப் புலவரின் வேருய்ப்
பிரித்தறி தலேமிகப் பெருந்துய ராகும்.

**ஒட்டக்கூத்தர்** :—பிரித்தறி தற்கும் பிறங்கு மொருவழி
கண்டேன்; அவ்வணங் காலேயி லேயே
மண்டல வொற்றரை வரவழைத் தவர்பால்,
"புலவ ரெனவே புறப்படு வோர்கள்
அனைவரு நமதரு கணைந்திட," என்றே
கட்டளை யிட்டேன் அங்ஙன மவர்க
ணேரில் வந்தால், நேர்மையு மாற்றமுஞ்
சுளுவிற் கண்டு சொல்லலா மன்ரே?

**நகைமொழி நாவலன்**:-சொல்லுவ தெதற்கு? துணிதலே சாலும்.

**வேலேயர்** :—அதுவொழுங் காக வமைந்திடு முறையே
புதியர் தங்கள் புகல்விணுக் களுக்கு
விடைசொலு முகமே விளக்கிடு மவர்திறம்;
தொடைபல தொடுக்குந் தொல்கவிப் புலவீர்!

**வீரத்தேவன்**:— (தோன்றி வணங்கி)
புவிக்குங் கவிக்கும் பொருந்திய வரசே!
குவித்தே னிருகை கொண்டந மொற்றரி
லொருவ ெஞருசில புலவர்க ளோடுதங்
காட்சியைக் காணக் கடைவாய்ப் புறத்தில்
வேண்டி நிற்கின்ருன்.

**ஒட்டக்கூத்தர்**:— வெகுளி! விரைவிற்
ருண்டியே யழைத்துவா

**வீரத்தேவன்**:— தொழுதனன்.
(செல்ல)

**ஒட்டக்கூத்தர்**:— (வேலேயரை நோக்கி) அமைச்சே!
கண்டீர்! உவகைக் காட்சியின் தொடக்கம்!

**நகைமொழிநாவலன்**:—கண்டேன் சனியின் காட்சியா மிதுவே.

**நல்லமுத்து**:—(ஒருவனேடு தோன்றி)
கவிஞர் பெரும! இக் காட்சி யோடிவர்
" புவிபுகழ் வெண்ணெய் நல்லூர்ப் பொருந்துஞ்

சடையப்ப வள்ள றமது வீட் டின்று
நடையப்ப வள்ளலாய் நடந்தார்; கண்டு,
கட்டளைப் படியே யிட்டிங்கு வந்தேன்.

**ஓட்டக்கூத்தர்:**—(போலிப்புலவனை நோக்கி)
ஓ! கோ! நீயார்?

**பெருமாள் பிள்ளை:**— ஒருமூ வாளி.
போகவே விட்டிடிற் புகழே மிகநனி.

**ஓட்டக்கூத்தர்:**—ஆனால், உனக்கே னிவ்வணி யாடை?

**பெருமாள் பிள்ளை:**—வானம் வெள்ளை! வளர்பயி ரில்லை!
குடிக்கக் கூழில்லை!........

**நகைமொழி நாவலன்:**— கொடிதாங் கருப்பு!
படுக்கப் பாயில்லை! பருவமும் போச்சு!;
மணவினைப் பேச்சோ மனையக மெங்கும்

**ஓட்டக்கூத்தர்:**—இலையேற் புலவன் வடிவோ வுனக்கு
விலையிலாப் பொருளாய்க் கிடைத்து?
(வீரத்தேவனை நோக்கி) வீரா!
இவனைக் கொடுபோய், இடுசிறைக் கூடம்.
(கொண்டு போக)

**நகைமொழி நாவலன்:**—இதுதான் தகுதி யானவேற் பாடு;
இராப்பகல் பட்டினி யிருப்பதை விடவிது
திராசின் முனைபோற் றினையும் பிசகா
திரண்டு வேளை யுணவினை யெதிர
திரண்டதோர் பரிசு தேடினாற் போலாம்.

**ஓட்டக்கூத்தர்:**—(நல்லமுத்தை நோக்கி)
இவனொருவ னேயோ? இணையிலா வொற்றே?

**நல்லமுத்து:**—அன்றென் னரசே; ஆறுபே ரின்னும்
நின்றனர், வெளியில்.

**ஓட்டக்கூத்தர்:**—(சினத்துடன்) ஒன்றொன்றாகக்
கொண்டுவா.

நல்லமுத்து:— (சென்று மற்றொருவனோடு வந்து)
இவனொரு மிண்டன் நடுத்தெரு
நாரா யணனொடு போரா டினன்மிக.

ஒட்டக்கூத்தர்:—பொறியி லகப்படும் நரிபோற் றிகைக்கு
மறிவிலி! நீயார்?

ஆறுமுகவேளான்:— (வாய் குழறிக்கொண்டே) ஐயா! யானொரு
குயவன்!

நகைமொழி நாவலன்:— குசவனா? நான்முகன் தோற்றம்
ஆகலின், மாலுடன், அண்ணா மலையின்
அடிமுடி தேடிய தடியடி போலும்.

ஒட்டக்கூத்தர்:— (வேலையரை நோக்கி)
அமைச்சே! புலமையி னழகினைப் பாரும்!
(குயவனை நோக்கி) இமைத்திடுங் கொடியோய்! என்னையுன்
போக்கு?

ஆறுமுகவேளான்:— பித்தளை யெங்களைப் பித்தளை யாக்கி
வெங்கல மெங்கள் மங்கையர் தங்கள்
மங்கல நாணையுஞ் செங்கையின் வாங்கி
விற்றிடச் செய்தெம் வேலையின் மண்ணை
யுற்றிடச் செய்த துயர்கவிப் புலவீர்!

ஒட்டக்கூத்தர்:—ஆ! கா! மடிய னறைந்திடு வாயில்
வாகா யமைந்தது.
(வீரத்தேவனை நோக்கி) வாராய், வாயிலோய்!
சிறையினிற் கொண்டுபோய்ச் சேர்ப்பா யிவனையும்
(கொண்டுபோக)

நல்லமுத்து:— (வேறொருவனோடு தோன்றி)
துரையே! இவனத் தோப்பில் கதிரவக்
கோனா ரிடத்தி லானைப் பொருளைப்
பரிசாய்ப் பெற்றான்.

ஒட்டக்கூத்தர்:— பழியுடைக் குருடா!
துரிசாங் கெடுமதி தோன்றிய தென்னே?

**கண்ணன்:**—ஐயோ! பெரியோய்! அடியே னெடுநாள்
வையகம் புகழ வருவார், போவார்
பலர்க்கும் மயிர்வினை பண்ணியே பிழைத்தேன்.
தலைப்பித் தத்தாற் சடக்கென விரண்டு
கண்ணும் பட்டுக் கட்டினாற் போல
விண்ணும் மண்ணும் விளங்கவே யில்லை.
அதனால், இப்படிச் செய்தே னறியேன்.
இனிமே லிப்படிச் செய்யே னிறையே;
மனிக்கவே யுன்றன் மலரடி பணிந்தேன்.
(வணங்க)

**நகைமொழி நாவலன்:**—
அடடா! என்பா லறிவித் திருந்தால்
வடதிசை முளைக்கும் பகலவன் வணங்கத்
தென்றிசை பார்க்கத் திருப்புவன் கதிரவக்
கோன்கண் கொடுப்பார்; கொள்ளலா மென்று
போனாய் போலும். புகுந்தது புலியே.

**ஒட்டக்கூத்தர்:**—ஓ! கோ! நாவிதன்! ஒழுங்கே! ஒழுங்கே!
(வீரத்தேவனை நோக்கி) சேவகா! இவனையுஞ் சிறையிற் சேர்ப்பாய்.
(கொண்டுபோக)

**நல்லமுத்து:**—(இன்னொருவனோடு புகுந்து)
தக்கோய்! இவனொரு தறிதலை யாவன்
செக்கார் தெருவிற் சின்னையன் செட்டி
யிடஞ்சென் "றொருகுட மெண்ணெய் கொடுக்க;
இன்றேல், வசைக்கவி யியற்றுவ னுன்மேல்"
என்றே மிரட்டி யெதிர்த்தான் கண்டேன்.

**ஒட்டக்கூத்தர்:**—முன்னவ னாவிதன். முனைந்துமுன் வந்த
பின்னவ னியார்? பெருந்தூ சுடையோன்?

**நல்லான்:**—ஆமாம், பெரும! அடியேன் வண்ணான்.
கோமா னுக்குக் குறியும் வருமோ?

**நகைமொழிநாவலன்:**—ஆமாம், நின்குறி தவறினு மவர்குறி
போமா றில்லை. புவிமுழு தறியும்,

**ஒட்டக்கூத்தர்:**—என்னே ! என்னே ! இக்கொடுங் காலம்!
நாவிதன் ! வண்ணான் ! நலமிகு குயவன் !
(வீரத்தேவனை நோக்கி)
சேவகா ! இவனென் றிருமுன் னிராமற்
சிறையினிற் புகுத்துவாய் விரைவினிற் போ! போ!
(கொண்டுபோக)

**நல்லமுத்து:**—(ஒருவனை யிட்டுவந்து)
மணியே ! கல்வியில்; மாநகர்த் தஞ்சைக்
கணிகை நீலக் கண்ணியின் மனையிற்
கவிக்கா யிரம்பொன் கட்டிடு வாயெனக்
கவிபோ லிவனுங் கலக்கம் விளைத்தான், .

**நகைமொழிநாவலன்:**—ஆ ? கா ! கவிக்கோ ராயிரம் பொன்னு?
ஆயின், இவர்மிக வருமையா னவராய்க்
கம்பர் வீட்டுக் கட்டுத் தறியாய்
இருக்கவே வேண்டுமென்னெனிற் புவியிற்
"கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும்
வம்பாய்க் கவியினை வாரியே கொட்டும்,"
என்பது பழமொழி யன்றோ?

**ஒட்டக்கூத்தர்:**— கம்பரின்
ஆயிரம் பொன்னீ கேட்டவ னரடா?

**வெள்ளையனுசாரி:**—(பயத்துடன்)
தாயினும் பெரியோய் ! தச்சன் யானே,

**நகைமொழிநாவலன்:**—தச்சனு ? நன்று ! தச்சன் தமிழே !
உச்சமா மிவ்விரு மொழிகளுந் தகர
முதலெழுத்தினையே முன்னிட்டுக் கொண்டன.

**ஒட்டக்கூத்தர்:**—ஆகலிற் பொருத்தமே ! சேவகா ! இவனையுஞ்
சிறையகங் கொண்டுசெல்; கறைமிக வுடையான்.
(வீரத்தேவன் கொண்டு செல்ல)

**நல்லமுத்து:**—(வேறொருவனைக் கூட்டிவந்து)
வளவர்தம் பெரும ! வந்திடு மிவனோ
வில்லியர் தெருவிற் றெல்லைகள் விளைத்துச்
சள்ளைகள் செய்தனன்; சாற்றற் கரிதே.

ஒட்டக்கூத்தர்:—கொள்ளைநோ யனையநீ யார்? முன் சென்றவன்
தச்சன். நீயோ தட்டான்? கருமான்?

கருப்பனாசாரி:—கவிஞர்க ளேறே! கருமான். இன்றெனை
யேகவே விட்டால், போகே னிப்புறம்.

நல்லமுத்து:—துரையே! இவன்மிகத் துடுக்கன், எங் களுக்கு
வரையேற் றம்போல் வருத்தான் மிகத்துயர்.

ஒட்டக்கூத்தர்:—அப்படி யாஇவன்? அனைவரி னுந்தனி
செப்படித் தொழிலைச் செய்பவன் போலும்.
கொடுபோய்ச் சிறையாங் கோட்டஞ் சேர்மின்.
(வீரத்தேவன் அழைத்துச் செல்ல)

நல்லமுத்து:—(இன்னொருவனோடு புகுந்து)
கவிக்களி றுகைக்குங் கவுடப் புலவீர்!
தடிய னிவன்கடைச் சங்கம் போற்றுங்
கடிய னென்று கழறியே பலரை
வஞ்சித் திட்டே வாய்ப்பந்த ரிட்டு
விஞ்சியே நின்றான்; வேளாளர் தெருவில்.

ஒட்டக்கூத்தர்:—முட்டாள்! நீ யார்?

அங்கணாசாரி:—(அச்சத்துடன்) தட்டான், அடியேன்.

ஒட்டக்கூத்தர்:—கெட்டாய்! அப்பாற் சென்றிடு. கேடே
யுற்றது புலவ ருறுதொழி லந்தோ!
(நல்லமுத்தை நோக்கி) ஒற்றே! இவனையு மொழித்திடு சிறைக்கு.
(வீரத்தேவன் கொண்டுபோக)
சென்றவிக் கள்வனிற் றீர்ந்தது?

நல்லமுத்து:—　தீர்ந்தது.

ஒட்டக்கூத்தர்:—நன்றே "நமது நாடிலம் வதியும்
போலிப் புலவர்கள் சிறையிற் புகுவர்"
என்பதை நந்நா டெங்கும் பறையான்
மன்பதை யறிய வழுத்திடச் செய்வாய்.

நல்லமுத்து:—செய்தனன், சிறியேன்; திருவடி வணங்கினன்.
(வணங்கிச் செல்ல).

**வீரத்தேவன்:**—(தோன்றி)

மையலின் மணியே ; வளவர் பிரான்றன்
அரண்மனை யமைச்சர் காணவே தங்கள்
முரணிலா வேளையை முன்னோக்கு கின்றார்.

**ஓட்டக்கூத்தர்:**—ஆயின், அவரை யழைத்துவா நொடியில்.

(வீரத்தேவன்செல்ல)

**மணிவணன்:**—(தோன்றி)

மாயிரு ஞாலம் வணங்கிடும் புலவீர்,
வணக்க மிகப்பல விணக்கமாய்த் தந்தனன்.

**ஓட்டக்கூத்தர்:**—அரண்மனை யமைச்சே ? வாரும். எப்பொழு
தடைந்தது ? மணமு மழகாய், ஒழுங்காய்
நடந்தது போலும்,

**மணிவணன்:**—நன்னெறிப் புலவர்
பெரும ! நும் வாழ்த்துப் பெற்றவிம் மணத்தின்
பெருமையை யென்னெனப் பேசுவல்? காலை
வந்தேன். வழுதியர் பெருமா னெமக்குத்
தந்தவர வேற்புச் சாற்றிடற் பாற்றோ?
வரிசைப் பொருள்களின் வளத்தினைச் செப்பத்
துரிசுடை யென்னுத் தோல்வியுற் றிடுமே,
ஆதலிற் பெரும ! அடங்கிய முடங்கல்
காதலிற் கொணர்ந்தேன் கடைக்கணித் தருண்மின்.

(ஓலையொன்றைக் கொடுக்க)

**ஓட்டக்கூத்தர்:**—(வாங்கிப் படித்துக்கொண்டே)

யானைக ளென்னே ? ஐபா யிரமா !
மானின மவற்றினை மடக்கிடும் போலும் !
தேரின மாயிரம். இஃதென் ! திரண்மணி
யழுத்திய வணிகள் ! ஆ ! கா ! இஃதார் ?
பழுத்த முத்தமிழ் பாடுபுக ழேந்தி !
யாண்டுள னன்னோன்?

**மணிவணன்;**—ஈண்டினர் வாயிலில்.
சாண்டகு பெரியோய் ! கழறிய விளைவெலா
மொப்புவித் திடுமிடஞ் செப்பிட வேண்டினன்.

ஒட்டக்கூத்தர்:—வரிசைகள் யாவும் புரிசையிற் சேர்த்திடும்
வாய்க்கொழுப் புடைய மன்புக ழேந்தியைச்
சிறையகஞ் சேர்த்திடும்.

மணிவணன்:— சிறையகம் ! செய்ததென்?

ஒட்டக்கூத்தர்:—பிள்ளாய் ! பேசிட லாருட னென்பதை
யுள்ளாய் விரைவில். உளறிடல் வேண்டாம்.
பழமையும் புதுமையும் பார்த்துப் பேசு.
கிழமையும் யாராற் கிடைத்தது? கருதுதி.

மணிவணன்:—புவிபோற் றரசே ! புகன்றவப் படியே
தமியேன் செய்தனன். சடுதியிற் செல்வல்.
(சென்றொரு புறமிருக்க)

நகைமொழிநாவலன்:—(தனக்குள்)
இதுவரை யேழு சனிகளே சிறையகஞ்
சேர்ந்தன. அவற்றை யேழரை யாக்க,
ஆர்ந்திடு மிந்த வரைச்சனி சேர்ந்தால்,
ஏழரை யாகும். இல்லா விட்டால்,
ஏழுங் கூடி யிளைத்திடு மிகநனி
சேறு நீருங் கலந்தா லன்றோ?
செந்தா மரையும் வந்திடுந் தெளிவே.
ஆயினும், இச்செய லாகா தெனவே
காயினுங் குறிப்பாய்க் கழறனங் கடமை.
(ஒட்டக்கூத்தரை நோக்கி)

(நேரிசை வெண்பா)

மாமியொடு போதன் மனைவியொன்றாய் வீற்றிருக்கப்
பூமியினி லாட்சிசெயும் புங்கவனே—நேமியினில்
ஊசியுடன் மற்றொன்று மூசி யுருத்தெழுந்தால்
வாசியுறல் யாதாம் வழுத்து.

ஒட்டக்கூத்தர்:—சொற்பெருக் கதனிற் றுதித்திடு புலமை
யுற்றிடு முளங்கவ ரொருபுக ழுடையோய்
வாசியி னுடலில் வசியிரண் டழுத்திற்
காசினி யிற்பசி யுற்றோன் கல்வி

பறத்தலே போலப் பறந்திடு மெனவே
பள்ளிப் பையனும் பாங்கா யுணரும்
வெள்ளிடை மலையா விளங்கிய விதனை
மதித்திறப் புலவர் விதித்திறங் கொண்டு
மதித்திட வந்தவன் மதிமிகப் பெரிதே.

(வேலையரை நோக்கி)
கதிரவ னுச்சியைக் கண்டனன், செல்வோம்
விதியினுஞ் சிறந்த மதிமிகு மமைச்சே!
(யாவரும்போக, மணிவணனிற்க)

மணிவணன்:—(தனிமொழி)
கற்றறி மூடன்! கண்ட தொன்றையே
பற்றிடும் பெரும்பதர்! பகரறி வின்றிச்
சொற்றவிக் கட்டளை தோன்றிட மதியுஞ்
சிதறிய தென்கொல்! சீர்த்திசால் துங்கன்
கிட்டிடு மளவுங் கீழ்ப்படிந் திவனை
மட்டந் தட்ட வழியினைக் குறிப்பல்.
அந்தோ! கொடுமை! அரும்புல வரைச்சிறை
குந்திடச் செயலே கொடுந்துயர். ஆயினும்,
சிறைக்கா வலர்பாற் செப்பியே, அவர்க்குத்
தேவைக ளனைத்துந் திட்டஞ் செய்து
காவலன் வரும்வரை காப்பதென் கடனும்;
சேவலங் கொடியோன் றிருவருள் நாடியே.
(போக)

(காட்சி முடிகிறது.)

---

# கொடுக்கூர் கோவிந்தன்

அல்லது

## சம்புலிங்கம் காவி பூண்டது

[காழி. சிவ. கண்ணுசாமியவர்கள் B. A.]

### முதற் கூறு

### வெற்றி இரவு

"நண்பர்களே, இனியுங் காலம் தாழ்த்தல் தகாது; புறப்படுவோம் உடனே" என்று கோடம்பாக்கத்திலுள்ள ஒரு சிறு வீட்டின் கூடத்தில் உட்கார்ந்திருந்த சம்புலிங்கம் தன் நண்பர்கள் மூவரையும் விளித்துக் கூறிவிட்டுத் தன் இருக்கையைவிட்டு எழுந்தான்.

நண்பர்களாகிய தம்மண்ணன், காசி, பட்டக்காரன் என்ற மூவரும் தமது கட்குடுவைகளை விரைவில் வெறுங் குடுவைகளாக்கி விட்டு எழுந்தனர்.

இருள் செறிந்த இரவு; மழையும் ஓயாமற் பெய்து கொண்டே இருந்தது. ஆகவே ஒவ்வொருவரும் ஒரு தடித்த கம்பளியை எடுத்துப் போர்த்துக் கொண்டனர். சம்புலிங்கம் தன் கம்பளிக்காகத் திரும்பினபோது பரட்டை என்ற நம்பிக்கையுள்ள வேலைக்காரன் கம்பளியை யெடுத்து வணக்கத்துடன் நீட்டுவதைக் கண்டான். முனியன் என்ற மற்றொரு வேலைக்காரனும் தம்மண்ணனுக்கு ஏதோ சிறு உதவிகளைச் செய்து கொண்டிருந்ததையுங் கண்டான். இவ்விரண்டு வேலைக்காரர்களும் அத்துணை விரைவில் திரும்பி வந்து விடுவார்களென்று அவன் எதிர் பார்க்கவில்லை. இருந்தாலும் ஓயா மழை ஏதுவாகத் திரும்பி யிருக்க வேண்டுமென்று உணர்ந்து கொண்டான்.

அன்றிரவு வேலையில் அவ்விரு வேலைக்காரர்களும் கலந்து கொள்வதென்று ஏற்பாடு செய்யவில்லை. ஆகவே அன்று மாலையில் அவர்கள் எப்பொழுதும்போல் வெளியே சென்று புலன் அறிந்து வந்ததுமன்றி, சில சிறு திருட்டுகளையும் செய்து முடித்து வந்-

திருந்தனர். இவ்வாறு சிறு திருட்டுகள் செய்வதில் அவர்கள் அடிக்கடி பிடிபட்டுக் கொள்வதுண்டு. ஆயினும் நற்காலமாக இன்று பிடிபடவில்லை போலும்.

"பாலக்கரை செறெயிலேர்ந்து யாரோ ஒரு பேர்வழி தப்பிச் சிக்கிட்டதாக சொல்லிக்கிறுங்க" என்று இயல்பிலே மொழிந்தான் முனியன்.

"யாரென்று கேட்டையா!" என்று வினவினன் தம்மண்ணன்.

இல்லை யென்பதற் கறிகுறியாக முனியன் தலையை யசைத்துக் கொண்டே "யாராச்சும் நாடோடியா யிருப்பான். இல்லாட்டி இத்தினி நேரம் பட்டணம் அமளி குமுளியா இருக்காதா?" என்ருன்.

இச் சிறு கதை ஏறக்குறைய ஓர் அரைநூற்றாண்டிற்கு முன்பு நடை பெற்றதாகும். அக்காலத்தில் சிறைக் கூடங்களில் கைதிகள் நூற்றுக் கணக்கில் உள்ளே அடைபடுவதும் அவர்களில் அடிக்கடி பலர் தப்பிச் செல்வதும் இயல்பு. "பணம் பாதாள மட்டும் செல்லும்" என்று சொல்லும் பழமொழிக் கேற்பக் கையிற் பொருளிருந்து விட்டாலும் செல்வந்தர்களான நண்பர்கள் உதவிக் கிருந்தாலும் அக்காலத்தில் சிறைகளிலிருந்து வெளியேறுவது ஒரு பெரிதல்ல. பொருளும் நண்பர்களும் இல்லாதோரிற் சிலரும் கூட நெஞ்சுரமும் அவர்தம் நுண்ணறிவும் துணை கூட்டத் தப்பிச் செல்வதும் உண்டு. காவலாளிகளும் சிறையிலிருந்து தப்பிச் சென்றவர்களைப்பற்றிய செய்தியைக் கூடிய வரையிற் பரவ விடுவதில்லை; தம் பெயர் கெட்டு விடுமாகலின். இருந்தாலும் தப்பிச் சென்றவன் பெயர் போனவனாக இருந்து விட்டாலோ செய்தி இமைகொட்டு நேரத்திற் காட்டுத் தீபோற் பரவி விடும்.

சிறையில் சம்புலிங்கத்தின் முட்டப் பகைவனான கொடுக்கூர் கோவிந்தன் என்பான் அடைபட்டுத் தூக்குத் தண்டனைக்காகக் காத்திருந்தது சம்புலிங்கத்திற்கும் அவன் நண்பர்கட்டும் தெரியும். அவன் தேர்ந்த கொலைஞன் ஆனதால் அவன் மட்டுந் தப்பிச் சென்றிருந்தால் ஊரெங்கும் அது தெரிந்து விடும் என்பதை யறிவார்

கள். ஆகவே முனியன் கூறியதிலிருந்து அவனாக விருக்க மாட்டானெனத் தெரிந்ததால் அதற்குமேல் அதிற் கருத்தைச் செலவிடவில்லை.

“என்ன முனியா, நீ கூட வராமல் உள்ளேயே புகுந்து கொண்டிருக்கப் போகின்றாயா என்ன?” என்று பட்டக்காரன் ஏளனமாக வினவினான்.

“இல்லே, நான் வர்லே. சாக்கடையில் நெனஞ்ச எலிபோல இப்பந்தான் ஊடு வந்து சேர்ந்தேனே மழையிலே ஆப்டு, ஒடனே எங்கே பொறப்பட்ரது?” என்று முனியன் பதிலளித்துவிட்டுத் தன் ஈர உடைகளையவிழ்த்து அடுப்பருகே உலர்த்துவானான்.

பட்டக்காரன்:—“பரட்டையா, நீ கூட வரவில்லையோ? நுங்கம்பாக்கத்தில் குறைந்தது நாலைந்து பேர்களுடனாவது மல்லுக்கு நிற்கவேண்டியதாக விருக்குமே? அப்படியிருக்க நீ இங்கே குறட்டைவிட்டுத் தூங்கப் போகிறாயா?

பரட்டை:—இந்தக் கேள்விங்களுக்கெல்லாம் பதிலுங்க சொல்றது நம்பளாலே முடியாதின்னு படுது; முனியனைத் தனியா இங்கே உட்டுட்டு நானும் வந்தூடலாமா?”

முனியன்:—“தம்பி! தம்பி! அந்தப் பேச்சு வாணாம். என்னைப் பற்றி நீ ஒண்ணுங் கவலை வச்சிக்கவாணாம். போரதின்னா நல்லா போ. இருந்தாலும் (சம்புலிங்கத்தை நோக்கி) இந்த மழேலேயும் இருட்டிலேயும் பேர்வழி வெளிலே வருவாண்ணு எனக்குத் தோணலே.”

சம்புலிங்கம்:—“மழை துவங்குமுன்பே அவன் புறப்பட்டிருப்பான். ஆகையால் நுங்கம்பாக்கத்தில் அவனுடன் அளவளாவப் போவதென்னவோ உறுதி. இரண்டு ஆண்டுகட்கு முன் தான் சென்னை நாட்டாண்மைக் கழகத் தலைவனாயிருந்தான்; இப்பொழுதும் அக்கழகத்து உறுப்பினனாயிருக்கிறான். அவனாவது ஒழுங்கு தவறுவது? ஒருநாளுமில்லை. திண்ணமாய் இன்றிரவு திரும்பிவந்தே தீர்வான்.”

என்று கூறியவண்ணம் சம்புலிங்கம் தன் தோழர்களுடன் வெளிக்கிளம்பினான். பரட்டையும் முனியனும் குளிர்காய உட்கார்ந்தனர்.

சம்புலிங்கம் நீலவேணியென்ற சிறந்த கருங்குதிரையின்மீதிவர்ந்து முன் செல்ல மற்ற மூவரும் தத்தம் குதிரைமேற் பின்றொடர்ந்தனர்,

இவர்கள் புறப்பட்ட நேரம் மழை ஒரு சிறிது தணிந்திருந்தது. ஆனால் காற்றுமட்டும் ஆயிரம் பாம்புகள் ஒன்றாகச் சேர்ந்து சீறுவதுபோல் உரத்த ஓசையுடன் வீசிக்கொண்டிருந்தது. வெண் முகிலும் கார்முகிலும் ஒன்றோடொன்று வெகு விரைவாக உறழ்ந்தோடிக்கொண்டிருந்தன. இடையிடையே கூனல் நிலவும் தோன்றி மறைந்துவந்தது.

நால்வரும் நுங்கம்பாக்கத்திலுள்ள ஆற்றுப் பால இறக்கத்தில் வந்து ஒதுங்கினர். சம்புலிங்கம் மட்டும் இருட்செறிவில் தென்முகமாக இடைவிடாமல் நோக்கியபடியே இருந்தான். சிறிதுநேரத்தில் இடையிலெழுந்த நிலவொளியில் இரட்டைக் குதிரைகள் பூட்டிய பெட்டிவண்டி யொன்று தொலைவில் வந்துகொண்டிருந்தது புலப்பட்டது. வண்டியின் முன்புறம் குதிரையோட்டுபவனோடு ஒரு வேலையாள் உட்கார்ந்திருந்தான். பின்புறம் இரண்டு ஆட்கள் வண்டியின் முகட்டைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தனர். கழுக்குன்றம் நிலக்கிழவரான திவான்பகதூர் சிவஞான முதலியார் துணையோடல்லது நெடுவழி செல்லாதவர். இதையறிந்தே சம்புலிங்கம் தன் நண்பர் மூவரையும் உடனழைத்து வந்திருந்தான்.

வண்டி வருவதைக் கண்டவுடன் சம்புலிங்கம் ஒவ்வொருவரும் எவ்வண்ணம் நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் படியிட்டுக் கூறிவிட்டுச் சாலை நடுவில் வந்து வடபுறம் மெதுவாகத் தன் குதிரையை நடத்தினான்; கையில் எச்சரிக்கையாகத் தன் துப்பாக்கியைப் பிடித்திருந்தான். அவ்வாறே மற்ற மூவரும் பின்பற்றினர். இவர்கள் நானூறு ஐந்நூறு அடிகள் இவ்வாறு செல்வதற்குள் வண்டியும் இவர்கள் பின் வந்து சேர்ந்தது. விண்ணெனக் காசி தன் குதிரையைத் திருப்பி வண்டியின் முன் வழியை மறைத்துநின்

றன். வண்டியிலுள்ள குதிரைகளிரண்டும் மிரண்டுபோய்ப் பின்வாங்கின. இதற்குள் தம்மண்ணன் வண்டியின் முன்புறமிருந்தவர்களையும், பட்டக்காரன் வண்டியின் பின்புறமிருந்தவர்களையும் கைத்துப்பாக்கியை நீட்டியவண்ணம் மடக்கிக்கொண்டனர். ஒருவரும் வாயைத் திறக்கவில்லை. வேலைக்காரர்களுக்கெல்லாம் வந்திருக்கும் நால்வரும் யாராயிருப்பார்கள் என்று தெரியுமாகையால் வாய் திறவாமலிருப்பதே நலமென அவர்கள் தீர்மானித்தனர்.

சம்புலிங்கம் இதற்கிடையில் வண்டியின் இடதுபுறக் கதவின் ஓரமாக நீலவேணியைச் செலுத்தினான். வண்டியின் கதவு படீரெனத் திறந்ததும் வெளுத்த மயிரோடு கூடிய உருண்டையான பெருந் தலையொன்று வெளியே எட்டிப் பார்த்தது.

"கையிற் பணமிருந்தால் முகத்தில் அக்காள் கூத்தாட வேண்டுமா என்ன?" என்று இகழ்ச்சிக் குறி தோன்ற வினவிய வண்ணம் சம்புலிங்கம் அத்தலைக்கு நேராகத் தன் கைத்துப்பாக்கியை உயர்த்திப் பிடித்தான்.

பொதுவாக நாட்டாண்மைக் கழகத் தலைவர்களாயுள்ளவர்களெல்லாம் மிகவும் சதுரர்களாயும் மக்களது நன்மதிப்பைப் பெற்றவர்களாயும் இருப்பது வழக்கம். ஆனால் எவ்விதிக்கும் விலக்கென ஒன்றிருப்பதுபோல் ஒரு சிலர் இருப்பதுண்டு. அவர்களில் நம் முதலியார் ஒருவர். ஈவிரக்கமற்றவர்; கொடுஞ் செயலாளர். ஆகவே அனைவராலும் ஒருங்கே வெறுக்கப்பட்டவர். மகன் இறந்தாலும் இருக்கட்டும் மருமகள் கொட்டம் அடங்கினாற் போதும் என்ற வல்லடி வழக்கு மாமியாரைப் போன்று தனக்கிருந்த ஒரே பெண் தன் வார்த்தையை மீறி அத்தையின் மகனை மணந்ததற்காக மருமகனுக்குப் பெருங் கேடு சூழ்ந்து மகளைக் கண்கலங்கச் செய்தவர். இஃது ஊரெங்கும் தெரிந்ததோர் செய்தி. இத்தகைய நெஞ்சப்பான்மை யுள்ளவர்களையே சம்புலிங்கம் குறிக்கொண்டு கொள்ளையிட்டு வந்தான். அஃது ஈயார் தேட்டை யாவருங் கொள்வர் எனக் கருதியேதான் போலும்.

"ஆகா! என்ன துணிச்சல்?" என்று உறுமினார் முதலியார்.

ஆனால் உள்ளுக்குள் மட்டும் அவர் உயிர் பாதிக்குமேல் போய் விட்டதென்றே சொல்லலாம்.

"ஒன்றுமில்லை. கழுக்குன்றமிருந்து ஓரே நடையாக வருகிறீர் களே சற்று இளைப்பாறிச் செல்லுங்கள் என்று சொல்லத்தான் நிறுத்தினேன். சட்டைப் பையில் இருக்கும் பணக்குவியல்கள் மிகுந்த சுமையைத் தங்களுக்குக் கொடுக்குமாதலால் அவற்றை யெல்லாம் என்னிடம் கொடுத்துவிடுங்கள். எடுங்கள், பெரிய வேரே, உடனே எடுங்கள், நிற்க நேரமில்லை." என்றான் சம்புலிங்கம்.

"அடாடா! இதற்காகத்தானா? அட பைத்தியமே, என் கையில் இப்பொழுது நாலைந்து ரூபாய்கள் கூட இல்லையே அதை வாங்கிக்கொண்டு போனால் உனக்கு எந்த மூலைக்கு அது தேறும்?" என்று அச்சத்தை வெளிக்குக் காட்டாது முதலியார் வினவினார்.

"மிகவும் நல்லதாயிற்று. அப்படியானால் அவற்றைக் கொடுக்க உங்களுக்கு ஏதுந் தடையிராது. ஆகையால் இருப்பதை உடனே கொடுத்துவிடும்" என்றான் கொள்ளைத் தலைவன்.

முதலியார் பாடு திண்டாட்டமாகிவிட்டது. தன்னுடைய பல வீடுகளின் குடிக்கூலியை யெல்லாம் தண்டிக்கொண்டு ஏறக்குறைய ரூபாய்கள் மூவாயிரத்துடன் அவர் திரும்பிவந்துகொண்டிருந்தார், அவையனைத்தையும் ஒருங்கே இவனிடம் கொட்டிக் கொடுத்து விட்டு உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனியைப்போல் விழிப்ப தென்றால் எப்படியிருக்கும்? எப்படியிருந்தாலும் இப்பொழுது என்ன செய்வது? திருடன் முற்றிலும் உண்மை தெரிந்திருப்பான் என்பதை யுணர்ந்தார். ஆகவே மறுவார்த்தை புகலாமல் பெருமூச் சுடன் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார்.

கொடுத்தாலும் உள்ளம் பதறிக்கொண்டிருந்தது. ஆகவே "அடே என்னைப் பெரிய வேரே என்று இகழ்ச்சியாகக் கூறினாயல் லவா? நான் நாட்டாண்மைக் கழகத்தைச் சேர்ந்த பெரியார் என் பது தெரிந்தும் இவ்வாறு மானம் வருபடி பேசியதற்காக உன்னை என்ன செய்கிறேன் பார். இருந்தாலும் நீ யாரென்று எனக்குத்

தெரியவில்லை அதுதான் கவலையாக விருக்கிறது.?" என்று குழறிக் குழறிக் கூறினார்.

"தெரியுமா, ஏன் தெரியும்? உமக்கும் உம்மை யொத்தவர்களுக்கு மிருக்கும் பணத்திமிரில் எங்களையெல்லாம் எங்கே தெரியப் போகிறது? என்னைப் பகதூர் சம்புலிங்கம் என்றழைப்பார்கள். பகதூர் என்றது அரசாங்கத்தார் கொடுத்த பட்டமல்ல ஆயினும் தவறிப் போய் உமக்களித்த திவான்பகதூர் பட்டம் எனக்கும் ஒரு நாளைக்கு வராமற்போகாது" என்று பதிலிறுத்தான் கள்வன்.

முதலியார் :—"ஆகா நீதானா, அந்தக் கயவன் சம்புலிங்கம்?"

சம்புலிங்கம் :—"இல்லை அவனல்ல நான். சம்புலிங்க நாடார் பகதூர் என்று தெரிந்து கொள்ளுங்கள். ஐயா முதல் ஈயாரே, உம்மையும் உம்மை யொத்தவர்களையும்விட நான் தேர்ந்த கயவனல்ல. இருக்கட்டும், என்னை என்னவோ செய்யப் போகிறேன் என்று கூறினீரல்லவா? எங்கே? நானே இடம், நேரம் எல்லாம் குறித்துக் கொடுக்கிறேன். நீர் வந்து உம்மாலியன்றதைச் செய்யும் பார்க்கலாம்.

முதலியார் "எங்கே, எங்கே?" என்று ஆவலுடன் கேட்டார். ஏனெனில் சம்புலிங்கம் ஒன்று கூறினால் தலை போனாலும் பிறழமாட்டான் என்பது உலகறிந்தது. ஆகையால் இப்பொழுது அவனாகக் கூறியபடிக் குறித்த இடத்திற்கு அவன் மட்டும் வருவானானால்.—

தன் முழுவஞ்சத்தையுந் தீர்த்துக் கொள்ளலாமென்றே கருதினார்.

"சரி நந்தவனக் கொண்டாட்டத்தின் முதல் நாள் சந்திப்போம். அதுவும் சென்ற ஆண்டு தாங்கள் அந்தப் பெயர்போன தாடிக்காரியைக் கட்டி யணைத்து முத்தமிட்ட அதே இடத்தில் என்றான், சம்புலிங்கம்.

இது முதலியாரின் நண்பர்கள் சிலரால் வேண்டுமென்றே கட்டி விடப்பட்டதொன்று. ஒருவரும் இதை உண்மையென நம்பா

விட்டாலும் முதலியாரின் மேலிருந்த வெறுப்பினுல் நம்புவது போற் காட்டி ஊர் ஊராய்ப் பரப்பி வந்தனர். முதலியார் பல முறை பலர் வாயால் இதைக் கேட்டுத் தலை இறங்கினுராயினும் இன்றிரவு சம்புலிங்கம் கூறத் தலை யிறக்கங் கொண்டதுபோல இது வரையிற் கொண்டதில்லை. என் செய்வது ?

"நான் வந்து விடுவேன். நீ வருவாய் என்பது என்ன நிச்சயம் ?" என்று முதலியார் பதை பதைப்புடன் கேட்டார்.

அவ்வாறு கேட்டதுதான்—பளீரென்று அவர் கன்னத்தில் ஓர் அறை விழுந்தது. பாவம்! நடுநடுங்கி விட்டார், முதலியார்.

"என்னைப் பொய்யன் எனக் கூறியதற்கு இப்பொழுதே கை மேற் கூலி கொடுத்து விட்டேன், வான் பொய்ப்பினும் தான் பொய்யான் சம்புலிங்கம் என்பதை இன்ருவது உணர்ந்து கொள்ளும். நந்தவனக் கொண்டாட்டத்தின் முதல் நாளன்று உம்மை அங்கே சந்திப்பேன். இது உறுதி. நீர் உம் கைத்திறத்தைக் காட்டும். வேண்டுமானுல் செந்தலைப் புலிகளையும் உடன் அழைத்து வாரும்; உமது எண்ணம் அதுதா னென்பதை யானறிவேன்; ஆயினும் எச்சரிக்கை! எச்சரிக்கை! தாடிக்காரியி னருகில் மட்டும் மற்ருெரு முறை செல்லாதீர். சென்ருல் நான் உம்மைத் தண்டிப்பதற்குள் அவள் சென்ற ஆண்டும் நீர்செய்த குற்றத்திற்காக உம்மைக் கொன்று விட்டாலுங் கொன்று விடுவாள். பிறகு நான் உம் வார்த்தையின்படி வந்ததும் வராததும் உமக்குத் தெரியாமற் போய் விடும்!" என்று கூறிவிட்டுச் சம்புலிங்கம் வண்டியை யோட்டிச் செல்லும்படி ஓட்டுபவனிடங் கூறினுன். வண்டியும் புறப்பட்டது.

(தொடரும்)

---

# வஞ்சித் திணை

[இளவழகனார்]

தண்டத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலைநாடு அதர்பட
உலக மன்னவன் ஒருங்குடன் சென்று.

(சிலப், கால்கோட், அடி-ரு)

'சேனைத்தலைவர்களும் சிறந்த அணிவகுப்பையுடைய கொடிப் படைகளும் மலைகளின் முதுகு நெளியவும் நிலைத்த வெளி நிலமெல் லாம் வழியுண்டாகவும் நீரலையின் வெள்ளிய தலையைப் பொருந்திய கடலின் ஓரமே சூழ்ந்துபோக, உலகத்தையாளும் அரசன் அவற் றோடு ஒன்றாய்ப் போய்' என்க.

'தார்' என்பதை 'அணிவகுப்புச் சேனை' யெனவும், 'கொடி களையுடைய சேனை' யெனவும் இரட்டுற மொழிந்துகொள்க. அச் சொல்லுக்கு இவ் விருபொருளுண்மையையும்,

'தாரே முன்செல் கொடிப்படை யாகும்'*

என்னும் பிங்கலந்தையாற் றெளியப்படும். 'மலை முதுகு நெளிய' வென்று முன் வந்தமையின் 'நிலைநா'டென்பது வெளி நிலமென் றுரைக்கப்பட்டது. நாடென்பதை நாடெங்குமுள்ள வெளிநிலமென் றுரைத்துக் கொள்க.

வெட்சியார் கைப்பற்றிச் சென்ற ஆநிரையை மீட்டற்குக் கரந்தையார் தம்மால் இயன்றவரையில் முயன்றனரேனும், அவர் கள் முன் முயற்சிகளும் முன்னேற்பாடுகளும் இலராயொழிந்த மையின் தங்கருத்து நிறைவேறப் பெற்றிலர். ஆதலால் ஆக்களை வெட்சியார் கைப்பற்றிச் செல்லவே அவற்றை யவர்கட்குப் பறி கொடுத்து வறிதே மீண்டனர். இஃதறிந்த அரசன் தனது மண்ணை வேட்டுத் தன்னாட்டு ஆகவர்ந்த அப் பகைப்புலத்து அரசன்மேற்

*பிங்கலந், சு: சஅசு.

சினமிகுதியுடையனாய்த் தன்னை முன்னேற்பாடுகள் முதலியவற்றால் இப்போது நன்றாய் வலுச்செய்துகொண்டு கொடும்போர் புரிதற்கு வஞ்சி சூடிக் கறுத்தெழுவானாயினன். இங்ஙனம் பகைப்புலத் தரசனைப் பொருது வெற்றிகோடல் குறித்துப் போர்மேற் செல்லுதலே **வஞ்சித்திணை** யெனப்படும்.

> 'வஞ்சி தானே முல்லையது புறனே
> எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
> அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே*

என்று **ஆசிரியர் தொல்காப்பியனார்** வஞ்சியொழுக்கம் இன்னதென்பதை மிகத் தெளிவாய் எடுத்தோதினார். இதனைப் **புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியர்** சிறிது மயங்கக் கொண்டனர். **நச்சினார்க்கினியர்** மேற்காட்டிய தொல்காப்பியனார் நூற்பாவுக்கு உரை கூறுகின்றுழி, 'இது தம்முண் மாறுபாடு கருதி வெட்சித் திணையை நிகழ்த்திய இருபெரு வேந்தருள் **தோற்றோனொருவன்** ஒருவன்மேற் செல்லும் வஞ்சித்திணை' யென்று 'வஞ்சி' இன்னதென்பதைப் பற்றிய தம்து துணிபினை விளங்க உரைத்தார். 'மண்ணை நச்சுதலையுடைய வேந்தனை மற்றொருவேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தது' என்று மேற் கருத்தோடு ஒப்பவே **ஆசிரியர் இளம்பூரணனாருரை**யும் அந்நூற்பாவுக்கு முதலிலேயே அமைந்திருக்கின்றது. ஆகத் தொல்காப்பியனார் நூற்பாக் கூற்றும், அதனை இன்னதென்று விளங்கவைத்தற் கெழுந்த இவ்விருபேருரையாசிரியரின் உரைக்கூற்றுமொழிகளும் தனது மண்ணை விரும்பி மாறாகித் தன்னைக் கறுவிய பகையரசனை அக்கறுவு தீர்த்து அடக்குதல் கருதி அக்கருத் தொன்றுமே ஏதுவாகப் போர்மேற் செல்லும் மாற்றரசனொருவன் ஒழுக்கமே 'வஞ்சித்திணை'யா மென்பதை அரண்கோலி நிறுவுகின்றனவன்றி, அயலரசர் எவருந் தன்னைச் சினப்பியாநின்றவழி தானே அவ்வரசர்தம் மண்ணை விரும்பி அவ்விருப்பமே ஏதுவாக அவன்மேற் படையெடுத்துச் செல்லுகை 'வஞ்சித்திணை'யாமென்று ஏதும் நிறுவுகின்றில.

---

*தொல், புறத், சு.

இனி இவ் வஞ்சித்திணைக் குறிப்புடைய அரிய பழந்தமிழ்ப் பாட்டுகளெல்லாம், திணைக்கருத்துருவி ஆராய்வார்க்கு மேலுண் மையையே வரைந்து கூறுவனவாய்க் காணப்படுதலுங் கருத்திற் பெரிதும் பதிக்கற்பாலது. அவற்றுட் சில ஈண்டெடுத்துக் காட் டுதும்: **ஆசிரியர் கோவூர்கிழா**ரென்னும் பண்டை நல்லிசைப் பெரும்புலவர் **குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்** என்னுஞ் சோழவேந்தனைப் பாட்டு கூறிச் சிறப்பிக்கப் புகுந்து தாங் கூறும் அச்சிறப்புரைக்கண் அவன்றன் றிறமையை வஞ்சியொழுக்கத் தின் மேலதாய் வைத்துப்

'பெருங்கலக் குற்றன்றால் தானே காற்றோடு
எரிநிகழ்ந் தன்ன செலவின்
செருமிகு வளவ, நின் சினைஇயோர் நாடே'*

என்று இசைத்து, 'வளவ, நின்னைச் சினம் வரும்படி செய்த பகை நாட்டின்மேல் நீ படையெடுத்துச் செல்லுகையினாலே அந்நாடு பெரிதுங் கலக்குற்றது' என்று சிறப்பிக்கின்றார். இதன்கண் தன் மேற் கறுவுகொண்டு தன்னைச் சினப்பித்த பகையரசன்மேல் அவ் வரசன் போர்மேற் சேறலையே வஞ்சியொழுக்கக் கருத்தாக அவ் வாசிரியர் பெருமகனார் விளங்க எடுத்துரைத்தமை காண்க. இன் னும், **சேரன் செங்குட்டுவன்** என்னுந் தமிழ்நாட்டுச் சேர மன் னன் பொற்கோட்டிமயஞ் சென்று கண்ணகிக் கடவுட்குக் கற் கொள்ளல்வேண்டி யெழுந்த ஞான்று, ஆண்டுள்ள வடவாரிய வர சர் தன்போன்ற தமிழரசரை இகழ்ந்தாரென்னும் எண்ணத்தினால் அவர்தஞ் செருக்கினை அறவே அடல் குறித்து வஞ்சிசூடிப் படை யெடுத்துச் செல்வானாயினன். இங்ஙனஞ் செங்குட்டுவன் பகை வரை அடல்குறித்துப் போர்மேற் சேறலையே **ஆசிரியர் இளங்கோ வடிகள்** வஞ்சியொழுக்கமென் றெடுத்து

'வடதிசை மருங்கின் மன்னர்த முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகிற்.........

---

* புறம், ௬௧.

குடிநடுக் குறூஉங் கோலே ளூகென.........
புரைதீர் வஞ்சி போந்தையிற் றெடுப்போன்'*

என்று தமது **சிலப்பதிகாரக் காதை**யிற் றெளிவாய் விளக்கினர். அற்றன்று, கண்ணகிக்குக் கற்கோடலொன்றே கருதி மலையரசனொடு மலைவேமென்று குட்டுவன் கூறுதலை அடிகள் காட்சிக்காதையில் வஞ்சித் திணைப் படுத்துக் கூறுகின்றாராலெனின், அதனையும் ஒரு சிறிது விளக்குவாம். செங்குட்டுவன் மலைவளங் காண்டல் விரும்பித் தேவி வேண்மாளோடுந் தம்பி இளங்கோவடிகளோடுஞ் சேனைகள் சூழ மலைக்குச் சென்று ஆண்டுக் கண்ணகி செய்தியைக் குன்றக் குறவராற் கழுமக்கேட்டு அவட்குத் திருவுருவமைத்துக் கோயில் சமைக்கக் கருதித் தன் அமைச்சரை நோக்கியபோது, அவரும் கண்ணகிக்குத் திருவுருவமைப்பதாயின் அதற்குப் பொதியிலிற் கற்கொண்டு காவிரிக்கண் நீர்ப்படுத்தலேனும் இமயத்திற் கற்கொண்டு கங்கைக்கண் நீர்ப்படுத்தலேனுந் தகவுடைத்தென்கின்றனர்; அதுகேட்ட குட்டுவன் 'எம்போன்ற சேர்குடிப் பிறந்தார்க்குப் பொதிய மலையிற் கல்கொண்டு காவிரியாற்றில் நீராட்டுதல் அத்துணைச் சிறப்பன்று; இமயத்திற்கொண்டு கங்கைக்கட் படுத்தலே வீரராகிய எமக்குச் சிறப்பாம்; ஆதலால் இமயத்திலேயே கற்கொளக் கடவேம்; அங்ஙனம் ஆண்டுக் கற்கொளற்கு அம் மலையரசன் இணங்கானாயின் வஞ்சி சூடி மலைந்து கொள்வேம்' என்கின்றனன். இங்ஙனஞ் செங்குட்டுவன் வஞ்சியெழுச்சி தோன்ற வீரமாயுரைத்த இப்பகுதியைச் சிலப்பதிகாரவாசிரியர்,

இருபிறப் பாளரொடு பெருமலை யரசன்
மடவதின் மாண்ட மாபெரும் பத்தினிக்
கடவு ளெழுதவோர் கற்றா ரானெனின்......
வேங்கையொடு தொடுத்த விளங்குவிறன் மாலை
மேம்பட மலைதலுங் காண்குவ லீங்கென......
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாண் மலைந்த வஞ்சிசூ டுதும்'†

* சிலப், கால்கோட், கங-ஞ, அ, சசு.

† சிலப், கஉஅ-கஙல, கஙக-கசல, அ-கூ.

என்று காட்சிக்காதையிற் கூறினர். இதன்கட் செங்குட்டுவன் கற் கோடற் பொருட்டு மலையரசனை மலைவான் கருதி 'வஞ்சிசூடுதும்' என்றானல்ல னென்பதும், மற்றுத் தான் கற்கொள்ளுதற்கு மலையரசன் இணங்கானாயின், அங்ஙனமவனை இணங்காமைக்கு ஏவிய அவன்றன் றீய செருக்கை அடல்குறித்தே 'வஞ்சிசூடுது' மென்றா னென்பதுமே வெள்ளிடை மலையென விளங்கிக் கிடக்கின்றன. மலையரசன் இணங்கியவழி ஆங்குக் குட்டுவனுக்கு வஞ்சி யொழுக்கம் ஏதுமில்லை. மேலும் அவன் முதலிலேயே தானாகவே கற்கொள்ளல் கருத்தாய் வஞ்சிசூடுவே மென்றானல்லன். இமையத்துக் கற் கொள்ளுதலென்னும் பேராற்றற் கறிகுறியான தனது பேராண்மைச் செயலைத் தடுத்துத் தன்னைச் சினப்பித்தவழி, அங்ஙனஞ் சினப்பித்த அம்மலையரசன் செருக்கை வஞ்சிசூடி மலைந்து அறவே அடக்கி அம்முறையே தனது பேராற்றலை உயர்த்துக் காட்டி நிலைநிறுத்துது மென்றனன். ஆகவே செங்குட்டுவன் 'வஞ்சிசூடுது' மென்றதன் கருத்துக் கற்கோடலன்றாய்த் தன்னைக் கறுவி மறியும் மலையரசன் ஆணவத்தை அடல்குறித்ததே யாமென்க. இங்ஙனம் பகையரசன் கறுவு தீர்த்தற்கு அவன்மேற் செலலான ஈதொன்றே வஞ்சித்திணைப் பொருள்வரம்பா மென்பது குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கடையெழு வள்ளல்களி லொருவனான தன் பகைவன் மலையமான் திருமுடிக் காரியின் இளநலம் வாய்ந்த மக்களிருவரைக் கைப்பற்றிக் கொணர்ந்து யானையின் காலடிக்கீழ் இடருறும்படி இடத் தொடங்கிக் கறுவு தீர்த்துக்கொள்ளும் மேற்செலவொன்றுமே குறித்த 'நீயே புறவி னல்ல லன்றியு' மென்னுங் கோவூர்கிழார் பாட்டொன்று வஞ்சித்திணைத் துறைமேலதாய்ப் புறநானூற்றுள் வருதலாலும் இன்னும் விளக்கமாய்த் தட்டுத் தடையின்றி இனிது பெறப்படுமென்க. இவ்வளவும் பகையரசனைக் கறுவுதீர்த் தடக்குதலொன்றே கருதிப் போர்மேற் செல்லுதலே வஞ்சித்திணையின் உண்மைக் கருத்தாமென்பதை இனிது விளக்கா நிற்பவும், புறப்பொருள் வெண்பாமாலை யாசிரியரோ வெனின்; ஆசிரியர் தொல்காப்பியனார் வரம்பளந்தியற்றிய மேல் நூற்பாவின் நுண்முறைப் போக்கினையும், மற்றதனோ டொத்திய லும் ஏனைப் பழந் தமிழ்ப் பாட்டுகளின் ஒருமுகப் போக்கினையும்

அளந்துணரமாட்டாது சிறிதே வழுவிப் பகைவர்தம் மண்கொள் ளல் கருத்தாகப் போர்மேற் சேறலே வஞ்சித்திணையின் முதன்மைப் பொருளென வைத்து,

'வாடாவஞ்சி தலைமலைந்து
கூடார்மண் கொளல்குறித்தன்று'

என்று கொளுவுரைத்து இழுக்கினர். மண்ணசைவேந்தனை அடல்குறித்தலே வஞ்சியென்று முதலாசிரியர் கூறினராகக், கூடார் மண்கொளல் குறித்தலே அஃதென்று பின்னாசிரியர் கூறு தல் வஞ்சித்திணையின் நோக்கத்தைப் பிறழ்த்தியவாறு மென்க. வஞ்சியரசன் உள்ளவியற்கையும் அஞ்ஞான்று அஃதன்றென்பதை மேற்காட்டிய செங்குட்டுவன் படைச்செலவு நோக்கத்தோடு வைத் துக் கண்டுகொள்க. பகைவனை அடல்குறித்துச் செல்லும்போது அவன்றன் மண்ணைக் கொளலும் ஒருகால் நேரலாம். ஆனால் அம் மண்கொளலென்பது வஞ்சித்திணையரசன் நோக்கமன்றிகாண். எனவே இக்கருத்துக்கு மாறுக ஆசிரியர் நச்சினார்க்கினியரும் புறத்திணையியலில் 'இருபெரு வேந்தற்கும் இடையீடாகிய மண் ணிடத்து வேட்கையானே' என்று நூற்பாக்கூற்றுக்கு ஒருவரம்பு காட்டும் பொறுப்பேது மில்லாமல் உரையுரைக்கும் ஓரோவோ ரிடத்து வழீஇய உரையையும் ஈண்டு ஏற்றுக்கொள்ளுதற் கில்லை. **ஆசிரியர் இளம்பூரணர்** மட்டும் இதன்கண் மிக விழிப்பாய்ச் சென்று நூற்பாக் கருத்தினைக் கெளவி அது கிடந்தவாறே உரை காட்டினர். ஆகவே வஞ்சியொழுக்கம் இன்னதென்பதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார்தம் 'எஞ்சா மண்ணசை' யென்னும் நூற்பாவும், அதனைப் பின்பற்றி யியன்ற பழந் தமிழ்ப் பாட்டுகளு மே அரணாகுமென்று கொள்கவென்பது.

இனி ஆசிரியர் இத்திணைக்குத் துறைகள் கூறுமாறு,

"இயங்குபடை யரவம்; எரிபரந் தெடுத்தல்;
வயங்கல் எய்திய பெருமை யானும்;
கொடுத்தல் எய்திய கொடைமை யானும்;
அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும்;
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்;

பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்;
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்;
பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்;
வென்றோர் விளக்கமும்; தோற்றோர் தேய்வும்;
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்;
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே"*

என்பது. இவற்றிற் குரியவாக வெண்பாமாலைத் துறைப் பெயர்களை முறையே வஞ்சி யரவம், உழபுலவஞ்சி, நல்லிசை வஞ்சி, கொடை வஞ்சி, நெடுமொழிவஞ்சி, மாராயவஞ்சி, பேராண்வஞ்சி, ஒரு தனி நிலை, பெருஞ்சோற்றுநிலை, இருவகைக் கொற்றவஞ்சி, கொற்ற வள்ளை, தழிஞ்சி யென்று பொருத்திக் கூறலாம். எனினும் இவை மேற் றுறைகளோடு அத்துணை நேராய்ப் பொருந்துவன அல்ல. என்னை? இவற்றின் கருத்து விளக்கங்கள் புறப்பொருள் வெண்பா மாலையில் தொல்காப்பியத் துறை விளக்கங்களோடு சிறிது மாறுற்று வேறு வேறு வகையாய்க் கூறப்பெற் றிருக்கின்றமையா லென்பது.

'இயங்குபடை யரவ' மென்பது வஞ்சியரசன் புறப்பாடுணர்த் தும். அரசன் புறப்படும்போது குடையையும் வாளையும் வெளிப் படுத்தி முன்னே செல்ல விடுதல் மரபாதலின், அது குறித்த 'குடைநிலை' 'வாணிலை' யென்னுந் துறைகளும், கொற்றவையைத் துணைகொள்ளுதலான 'கொற்றவை நிலை' யென்னுந் துறையும் வெண்பாமாலையிற் கூறப்படும். தொல்காப்பியனார் இவற்றைப் பிரித்துக் கூறாது 'இயங்குபடை யரவ' மென்று ஈண்டு ஒன்றே கூறி அதன்கண் அடக்குவர்; ஏனென்றால் குடையும் வாளும் முதலியவற்றை எடுத்துக் கூறும் முதன்மை உழிஞைத் திணைக் கண் ஏற்படுதலின், ஆசிரியர் அவற்றை ஆண்டெடுத்தோதுதல் கருதினாரென்க.

'எரிபரந்தெடுத்தல்' பகைவர் நாட்டினை எரித்தல் குறித்தது. தீப்பற்றி எரியுங்கால் அப்பகைவர் நாடு தடுமாறி நிற்குமாதலின், இச்செயலை 'உழபுலவஞ்சி' யென்று வெண்பாமாலை கூறிற்று. வினைத்

* தொல், புறத், அ.

தொகை யாதலின், 'உழல்'லென்பது முதனிலை யளவாய் உழவென்று நின்றதென்க. பகையரசன் நாட்டினை வஞ்சியரசன் இவ்வாறு தீயிட்டுச் சுடும் போர்முறைச் செயல்,

'ஏம நன்னா டொள்ளெரி யூட்டினை
நாம நல்லமர் செய்ய'*

என்னும் புறப்பாட்டினானுந் தெளியப்படும். அரசன் போர் செய்தற்கு முன் பகைவர் நாட்டினை எரியூட்டிக் கொளுத்துதல் அவன் றனக்குள்ள கறுவெண்ணத்தின் முனைப்பினைக் காட்டுகின்றது. பண்டைத் தமிழரசர் பகைவர் நாட்டினைத் தீமூட்டி யழிக்குங் கால், அந்நாட்டு முதியோர் இளையோர் அறவோர் மார்ட்டாதார் ஆன் பெண் முதலிய நல்லோரைத் துன்புறுத்தாது விலக்கி அவ்வரசனுக்கு மறவராயினார்க்கே பெரும்பான்மையும் இறுதி விளைக்க முனைவர். இவ்வறப்போர் முறையை வெட்சித் திணைக் கட்டுரையினும் விளக்கினேம். கண்ணகி நல்லாள் மதுரையை எரியூட்டியபோது அவ்வெரி பற்றிய சார்பினை ஆசிரியர் இளங்கோ வடிகளும்,

"அறவோர் மருங்கி னழற்கொடி விடாது
மறவோர் சேரி மயங்கெரி மண்ட"†

என்று தீத்திறத்தார் பக்கமே எடுத்துக் காட்டினமை காண்க. எனவே பண்டைத் தமிழரசரின் படைச்செலவின்கண் எரியூட்டு நிகழ்த்துதலின் நோக்கம் ஊரிடத்தை யழித்தலே யன்றிப் பெரும்பான்மையும் அந்நாட்டு உயிர்களான குடிமக்களை யழித்தல் அன்றென்பது நன்கு விளங்கும். அங்ஙனம் ஊரை யெரிக்கும்போது மறவராயின தீத்திறத்தார் அதன்கட்பட்டுச் சாதலும், அவரை இவரும் ஏது நேர்ந்துழி முனைந்து அகப்படுத்தலும் இயல்பேயாம். என்றாலும், பொதுவாக இல்லங்கள் மன்றங்கள் சோலைகள் வயல்கள் முதலாகத் தோற்றத்திற்கிடமான ஊரிடங்களை யெரித்துப் பாழாக்குதலே அக்காலத்துப் பழந்தமிழரசரின் எரியூட்டுந் திறமென்பது,

---

* புறம், கசு. † சிலப், அழற், ககந-கச.

"மயங்குவள்ளை மலராம்பல்
பனிப்பகன்றை கனிப்பாகல்
கரும்பல்லது காடறியாப்
பெருந்தண்பணை பாழாக
ஏம நன்னாடு ஒள்ளெரி யூட்டினை"*

என்னும் புறச்செய்யுளிற் பிரிந்து விளங்கும். 'காவெரி யூட்டிய'† வென்னுஞ் சிறுபாணடியும் இதனை வலியுறுத்தும்.

'இனி 'எரிபரந்தெடுத்த'லென்று தொல்காப்பியனார் கூறிய துறைச் செய்தியைப் புறப்பொருள் வெண்பாமாலை இரண்டு வகையாகப் பிரித்துக்கொண்டு, எரித்தழிக்குஞ் செயலைமட்டும் 'உழபுல வஞ்சி' யென்றும், அங்ஙனம் அழித்துக் கொள்ளை கொள்ளுஞ் செயலை 'மழபுலவஞ்சி' யென்றும் இரண்டு துறைகள் கூறும். 'மழ புல' மென்றது, இளைத்த நாடு: மழமென்பது இளமை; தனக்கு இளைத்த நாடென்க. அந்நாட்டின்கட் காட்டும் வஞ்சி யொழுக்கம் 'மழபுல்வஞ்சி' யெனப்பட்டது. இனி அவ் 'வுழபுலவஞ்சி'யையும், இரண்டு படுத்துப் போர்க்கு முன் எரித்தலை 'உழபுலவஞ்சி' யென்றும், மற்றதற்குப் பின்னொரு முறையும் எரித்தலைப் 'பெருவஞ்சி' யென்றுங் கூறும். போர்க்குப் பின்னரெரித்தல் அரசனது பெருஞ் சினத்தால் நிகழ்வதாதலின், 'பெருவஞ்சி'யெனப்பட்டது. போர்க்கு முன்பே யெரித்தல் வயல் சோலை முதலிய ஊர்ப்புறத்தையென்றும், பின்னுலெரித்தல் இல்லம் மன்றம் என்னும் ஊரகத்தை யென்றுங் கொள்ளல் வேண்டும்.

இனி 'வயங்கல் எய்திய பெருமை' யென்றது, படைச்செலவில் ஏனைத் துணையரசர் தனக்குத் தத்தம் படையுடன் உதவிக்கு வந்தாராக, அவர் நடுவே வஞ்சியரசன் தலைவனாய்த் தோன்றிப் பொலியும் பெருமையாகும். பாசறையினின்று பொலிதலு மிதுவாதலின், 'பாசறைநிலை' யென்றொன்று கொள்ளும் வெண்பாமாலைத் துறை இதன்கண் அடங்கும்.

போர்க்கு முன்பு தன்னை ஏத்தும் பரிசிலர்க்கு அரசன் பொருளளித்தல் 'கொடுத்தல் எய்திய கொடைமை'; இப்பரிசிலர்

*புறம், கசு. †சிறுபாண், உநஅ.

போன்றுரை இனிய நிலையில் வைத்துப் போர்மேற் செல்லல்வேண்டு மென்பது அரசன் கருத்து. படையாளர்க்குப் படைக்கல முதலி யன கொடுத்தலும் இதுவே துறையாக அடக்கினர் **நச்சினார்க் கினியர்.**

வீரர்கள், அரசன் போர்மேற் செல்லும்போதே அவனினும் பரபரப்பு மிக்கவராய் முனைந்து, அப்பகைவர் நாடு சூழக் காவல் புரிந்து நின்றோரை மேற்சென்று கோறல் 'அடுத்து ஊர்ந்து அட்ட கொற்ற'மாகும். துறைபடிந்து கிடக்குங் களிறும் மாவுங் கோற லும் புறஞ்சேரியைச் சுடுதலும் இஃதென்க. இது 'மேற்சேற'லின் விரைவுக் குறிப்பினையுடைமையின், இதனை 'வஞ்சி' யென்றார். வெண்பாமாலை யாசிரியர், கொல்லும் நிகழ்ச்சியை எடுத்துக்காட் டாமல், ஆண்டு வீரரெல்லாரும் அவரொடு ஆண்மை கூறுவர் என்றுமட்டுங் கூறி இதனை 'நெடுமொழிவஞ்சி' யென்பர்.

போர்வல்லராய் நின்ற வீரர் அரசன்மாட்டு ஏனாதி முதலிய பட்டங்களும் மருத நிலம் முதலிய நிலங்களும் பெற்றமையாற் றலை மைபெற்று ஏனைப் படைகளை நடத்துதற் பொருட்டுக் கூறுந் தலை மை மொழிகள் 'மாராயம் பெற்ற நெடுமொழி'; படைவீரரின் முதி யோரைப் பற்றிய புகழை யெடுத்து ஆண்டுச் சொல்லி மாராயம் பெறுதலும் நிகழும். இதனை 'முதுமொழிவஞ்சி' யென்னுந் துறை யாய் வேறெடுத்து விளக்குவர் வெண்பாமாலையுடையார். வீரர் இங்ஙனம் பட்டங்களும் நிலங்களும் பெறும் மாராயமென்பது இக் காலத்துப் போர் முறைகளிலும் உண்டு. நச்சினார்க்கினியர், புண் பட்ட வீரரை அவர் முன்னர்ச் செய்த படைவலங் கூறிப் புகழ்வன போல்வனவும் 'முதுமொழிவஞ்சி' யென்பர்.

'பொருளின்று உய்த்த பேராண்பக்க' மென்பது பகையர சனை ஒருபொருளாய் மதியாது வஞ்சிவேந்தன் படைசெலுத்தும் பேராண்மையைக் குறிக்கும்.

'கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமை' யென்பது, போர் மிக மும்முரமாய் நடக்கும்போது தன் படை தளர்தலைக் காணும் வீரக்கொதிப்பு மிக்க வீரனொருவன், பெருகிவரும் நீர் வெள்ளத்

ளைத இடையே ஒரு கல்லணை நின்று தடுத்தாற்போல மேற்பெருகி வருஞ் சேனை வெள்ளத்தைத் தானே முன்னின்று தடுக்கும் பெரு வீரச்செய்கையை யுணர்த்துவதாம். இஃதும் படைமேற் செலவின் முனைந்த நிலையைக் குறித்தலின் 'வஞ்சி' யாயிற்று.

இனி வீரர்கட்குப் பெருஞ்சோறளித்தல் 'பெருஞ்சோற்று-நிலை'யாம்.

வென்றவர் விளங்கி நிற்றல் 'வென்றோர் விளக்க' மென்றும், தோற்றோர் தேய்ந்து நிற்றல் 'தோற்றோர் தேய்' வென்றுங் கூறப் படுகின்றன. இவ்விரண்டும் வெண்பாமாலையிற் 'கொற்றவஞ்சி' யென்னும் ஒரே துறையாற் கூறப்படும்.

தன் வெற்றியினுற் பகைவர் நாடு அழிதற்கிரங்கித் தோற்ற வனை விளங்கப்பாடுதல் 'கொற்றவள்ளை' யென்க. 'கொற்றவள்ளை' யென்பது உரற்பாட்டு' என்றார் நச்சினார்க்கினியர். இதனைத் 'தோற்ற கொற்றவன் கொடுக்குந் திறை' யென்றார் இளம்பூரணர்.

'தழிஞ்சி' யென்பது, போர்க்களத்துப்பட்ட வீரரின் சுற்றத்த வர்களை அரசன் தழுவிப் பாதுகாத்தல் 'தழிச்சுதல் தழிஞ்சி யாயிற்'றென்பது நச்சினார்க்கினியம், வெண்பாமாலையிற் 'குறு வஞ்சி' யென்று வந்த துறையுமிது; குறுமை, அழகு; வஞ்சியரச ஞயினனுக்கு இஃதே அழகாதலின், 'குறுவஞ்சி' யெனப்பட்டது.

இங்குக் கூட்டிய துறைகள் பதின்மூன்றும் போர்க்கு முன் னும் பின்னும் நிகழ்வனவாமென் றறிதல் வேண்டும். போர்ச்செய்தி தும்பைத்திணையுள் வரும். போர்க்குப் பின்னல் வாகையரசன் தன் ஞடு மீளல் முதலியன, முதலிற் பகைநாடு செல்லுஞ் செலவு முதலியவற்றோடு இனப்பட்டனவாதலின், அச்செய்திகளை ஆசிரியர் இவ்வஞ்சியுள் அடக்கினர். 'வாகை'யுள் இதற்கு இடமின்மையை ஆண்டுக் காட்டுதும்!

இனிப் போர்மேற் சென்ற வஞ்சியரசன் ஆங்குப் பாசறை யமைத்துக்கொண்டு மேற் போர்செய்தற்குரிய சூழ்ச்சிகளையும் ஏற் பாடுகளையுஞ் செய்துகொண்டு அப் போர் துவங்குநேரம் வரையில்

இந் நாற்படைகளோடுங் காத்திருப்பான். அரசன் பகலெல்லாஞ் செலவினை மேற்கொண்டு கடுகி நெடுந் தொலைவு சென்று மாலைக் காலத்திற் பாசறை யமைத்திருப்பன். வேனிற் பருவமல்லது ஏனைப் பருவங்கள் இப் போர்மேற் செலவுக்கு அத்துணைப் பொருந் துவன அல்லவாதலின், அவ்வேனிற் காலமெல்லாம் பாசறையிருப் பினை மேற்கொள்ளும் அரசனுக்கு அவ்விருப்பு முற்றுங்காலம் வேனிற்கால இறுதியுங் கார்காலத் துவக்கமுமா மென்க.

'கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
காதலி னொன்றிக் கண்ணிய மரபினும்'*

என்று தொல்காப்பியர் கூறுதலின், சிறுபான்மை கூதிர்காலத்திலும் பாசறையிருப்புக் கொள்ளப்படும். பாசறையிருப்புக் குரிய இடம் ஊர்ப்புறத்ததான காடுறையுலக மென்பது வெளிப்படை.

'பாசறை'யென்பது, பகையரசன் பட்டினத்திற்குக் காவலா யமைந்துள்ள காடு நடுவண், ஆங்குள்ள செடி, கொடிகளையுந் தூறு களையும் வெட்டி, வேட்டுவர் அரண்களையு மழித்து முட்களைச் சூழ்மதிலாய் வளைத்துத் திரைச்சுவ ரெழுப்பித் தழைக்கூரை வேய்ந்து அகலமாய் ஆக்கப்படும் 'பாடிவீ'டாகும். இதனுள் எத் தனையோ பல வீட்டறைகளும் வீடுகளுந் தெருக்களுந் தெருச் சந்திகளும் வெளிகளும் நீரும் நிழலு மிருத்தலின், காண்பார்க்கு இஃதோர் ஊரென விளங்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். இத னியல்பினைக்,

"கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப் புழையருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி"†

என்பனவும், இவற்றை மேற்றொடர்ந்தனவுமான முல்லைப்பாட்டடி களா லறிந்துகொள்க.

---

*தொல், புறத், உக. †முல்லை, உசு-அ.

இனி இவ் 'வஞ்சி' யென்னும் புறப்பொருள் தனக்கு அக மான முல்லையொழுக்கத்தோடு நுணுகிப் பொருந்துமாறுங் காணற் பாலது.
வஞ்சிக்கு முதல் கரு உரிப் பொருள்களான இடமும் பொழுதும் பூவும் இருப்பும் முறையே காடும், வேனிலிறுதியாகிய கார்கால வியல்பமைந்த மாலையும், காட்டிடத்திற் பூக்கும் வஞ்சிப் பூவும், பாடிவீட் டிருப்புமாகும். முல்லை யொழுக்கத்துக்கும் அந்நான் கும் முறையே அக் காடும், கார்கால மாலையும், காட்டிடத்துப் பூவும், இளமரக்கா சூழ்ந்த வீடுமாகும். அரசன் பாடிவீட்டி லிருப்பது போலத் தலைவி தனது வீட்டிற் போர்மேற் சென்ற தலைவன் வரவை எதிர் நோக்கி யிருப்பள். இவ்விருவகை யிருப்பு நிகழ்ச்சி களும் வேனிற்காலத்தே நிகழ்வனவாயினும் அவ்விருப்பைப் பற்றிய உணர்ச்சி முனைப்புக் கார்கால வியற்கையதான வேனி லிறுதிக்கண் விளையுமாதலின் ஆசிரியர் அதற்குக் கார்காலமேகால மாக வரைந்தோதினர். அது நிற்க,

மலையென்று நினைத்தவுடனே ஒரு பெரிய மண்ணின் திரளை தோன்றுதல்போல முல்லைக்கும் வஞ்சிக்கும் இடமான காட்டினை நினைத்த உடனே நமதுணர்ச்சிக்குச் செடி கொடிகளின் கூட்டமே உருவாய்த் தோன்றுகின்றது. காடுகளில் மண் நீர் நெருப்பு காற்று வான் என்னும் ஐந்துபொருள்களிலுஞ் சிறப்பாய்க் காணப் படுவது **நீரா**கும்; அஃது அங்குள்ள செடி கொடிகளின் பயனும். உலகத்தில் நீர்ப்பெருக் குண்டாதற்குரிய மழை காடிருக்கும் இடங் களிலேயே நிரம்பப் பெய்தலான கண்ணெதிர் நிகழ்ச்சியினாலும், அவ்விடத்துக் குளிர்ந்த காற்றினாலும் இதனைத் தெளிந்து கொள்க. மழை காலத்தில் மழையும் வேனிற் காலத்திற் குளிர்ங் காற்றுந் தந்து காடுகள் தமக்குரிய நீர்த்தன்மையை வெளிப் படுத்தும்.

இனி. நீரினின்றும் உயிர்கட்கு நேரே யுண்டாகு முணர்ச்சி **தண்மை** யென்பது. தணிதல் ஆறுதலாகும். வஞ்சி யொழுக்க மென்பது கறுவு தீர்க்குஞ் செயலாதலின், அஃதொரு தணிதலாம். 'முல்லை'யென்பது தலைவி தனது காமக்கொதிப்பைப் பொறுத்திருத்

தலாதலின், அஃதுமொரு தணிதலாம். இவ்வாற்றாலும் அவையிரண்டும் இனமாயமைந்திருத்தல் காண்க. மண் முதலான ஐம்பொருள்களிலும் நீரினைச் சுவைத்துக் காண்பது வாய்ப்பொறி யாதல் எவர்க்குந் தெரிந்த தொன்று. வேந்தன் படைச்செலவான வஞ்சிக்கண் நீரைச் சுவைத்தலே மிகுதியும் வேண்டப்படும். இஞ்ஞான்றும் மேனாட்டுப் போர்களில் வீரர் முதலாயினார்க்கு நீரே பாதுகாப்பாகக் கொடுத்தனுப்பப்படுகின்றது. தலைவன் பிரிவினைப் பொறுத்துக்கொண் டிருக்குந் தலைவியின் முல்லை யிருப்பின்கண்ணும் அவளை ஆற்றுவித்தற் பொருட்டு அவள் தோழியரால் இனிய குடிநீர் முதலியனவே மிகவும் பயன்படுத்தப்படும்.

வஞ்சி யொழுக்கம் மேற்கொண்ட வேந்தற்கு முடிவிற் பகையரசன்மேல் ஓரன்பு ஊற்றெடுக்கும். என்னை? முன்னெல்லாம் நட்பாயிருந்த அரசன் இஞ்ஞான்று பிரிந்து தேய்ந்து தன்னை எதிர்பார்க்கின்றமையி னென்பது. இதனைக் 'குன்றாச் சிறப்பிற் கொற்றவள்ளை' யென்று ஒரு துறை கொடுத்து ஆசிரியர் தொல்காப்பியனாரும் விளக்குகின்றமை காண்க. இங்ஙனமே அகப்பொருள் முல்லையின் முடிவிலும் முன்பெல்லாங் கூடியிருந்த தலைவி தன் தலைவனது வஞ்சிச் செலவாற் பிரிவு நேர்ந்து நனி பெரிதும் பொறுத்திருந்து அவ்விருப்பின் பயனாகப் பின்பு கூடுங் கூட்டவியல்பினால் முதிர்ந்த அன்புணர்ச்சியினை ஊற்றுப்பெருக்கெனப் பெறுகின்றன ளென்க. புறப்பொருள் வஞ்சியினும் அகப்பொருண் முல்லையினுந் தலைவனுந் தலைவியும் பெரிது பழகிப் பயனெனப் பெறும் பொருள் அன்பேயாகுமென்பது அவற்றிற் குரிய இடம் பொழுது தொழில்களான காடுசெழு காட்சி, கார்மாலைப் போது, பிரிவுப் பொறுமையிருப்பு முதலியவற்றின் இயற்கைகளை யெல்லாம் விரித்தாராய்தலா லினிது பெறப்படும்.

இவ்வாற்றால் முல்லையும் வஞ்சியும் அகம்புறமாய் இயையுமாறும், நீரின் பொருட்பயிற்சி 'வஞ்சி' யென்னுந் தண்மையுணர்ச்சியாய் நுணுகிச் சுவைக்குஞ் செயலால் 'முல்லை' யென்னும் அன்புணர்ச்சியாய்ப் பின்னும் நுணுகி அகப்பொருட் காதலர்க்குப் பேரா இன்பம் பெருக்கி நிற்குமாறும் அறிந்து கொள்க.

## ஒரு பிழைதிருத்தம்

'கரந்தைத் திணை'க் கட்டுரையிற் காட்டப்பட்டிருக்கும் வாய்பாட் டட்டவணையில் 'அன்பு (மருதம்) அறிவு (பாலை) அருள் (முல்லை)' யென் றிருப்பதை, 'அன்பு (முல்லை) அறிவு (மருதம்) அருள் (பாலை)' யென்று திருத்தி யமைத்துக்கொள்க.

---

# பாகவதம்

[திரு. S. அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் M.A., L.T.]

பாகவத மென்று சொன்னவளவிலே கண்ணபிரான் வரலா றுரைக்கும் நூலே நம் நினைவில் வருகிறது. ஆரிய மொழியில் புராணங்கள் பதினெட்டு. அவையனைத்தும் வியாசர் செய்தன வாகவே சொல்லப்படுகின்றன. பாகவதம் அவற்றுள் ஒன்றாக எண்ணப்படுகின்றது. திருமால் பெருமை கூறும் மற்றைப் புரா ணங்கள் விஷ்ணு புராணம், நாரதீயம், காருடம் என்பனவாம்.

இனித் தேவீ பாகவதம் என்றொரு புராணம் வழங்குகின் றது. மற்றைப் பாகவதத்தைப் பதினெண் புராணங்களு ளொன் றாகக் கருதுபவர் இதனை உபபுராண மென்பர். தேவீ பாகவதத் திற்கு வடமொழியி லுரையிட்ட நீலகண்டர் முதலியோர் இதுவே வியாசராற் செய்யப்பட்ட பதினெண் புராணங்களுளொன்றாகும் மற்றது உப புராண மென்பர். அதை நிறுத்த அவர் எடுத்துக் கூறும் நியாயங்களும் பலவுண்டு. தேவீ பாகவதம் சிறிது காலத் திற்கு முன் தமிழில் வசன ரூபமாக மொழி பெயர்த்து வெளிவந் தது. தேவீ பாகவதம் தேவி பெருமையை விரித்துரைப்பது. இதுவும் மற்றைப் பெரும் புராணங்களைப்போலவே சர்க்க முத லிய ஐந்திலக்கணங்கள் அமைந்தது. 18,000 சுலோகங்களடங் கிய 318 அத்தியாயங்கள் கொண்ட 12 ஸ்கந்தங்களை யுடையது.

தமிழில் செய்யுள் வடிவாக எழுதப்பட்ட பாகவதங்கள் இரண் டுள. ஒன்று புலவர் திலகராகிய ஆரியப்பபுலவர் அருளிச் செய்த தாக வழங்கி வரும் ஸ்ரீமத் பாகவத புராணம். இதனை முதலில்

(கி. பி. 1881) அச்சிடுவித்து வெளியிட்டவர் சென்னையில் தமிழ்ப் பெரும் புலவருளொருவராகக் கருதப்பட்ட கோமளபுரம் இராசகோபால பிள்ளை. ஆரியப்ப புலவர் திருக்குடந்தையின ரென்பதற்கு ஒரு வெண்பா ஆதாரமாகின்றது.

கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக் கூத்தனென்றும்
கும்பமுனி யென்றும்பேர் கொள்வாரோ—அம்புவியில்
மன்னு வலர்புடைசூழ் வாழ்குடந்தை யாரியப்பன்
அந்நாளி லேயிருந்தக் கால்.

ஆரியப்ப புலவரை வேளாள ரென்பர் என்றார் அபிதான சிந்தாமணியுடையார். நூலாசிரியர் பெயரை ஆரியப்ப புலவர் என்பது தவறு மாதவராயர் என்னும் செவ்வைச் சூடுவார் என்னல் வேண்டுமென்று இக்காலத்துப் பலரும் உரைப்பர். வித்துவான் ரா. இராகவையங்காரவர்கள் (செந்தமிழ் தொகுதி ச, பகுதி அ-1906) மேற்காட்டிய வெண்பா அநதாரி யென்னும் புலவர்மேலெழுந்த பாட்டின்றிரிபே (மன்னு வலர்பரவும் வாயலந தாரியப்பன்) யாகுமென்றும், ஆரியப்பனென்னும் பெயரே யாண்டுங் கேட்கப் படவில்லை யென்றும் உரைத்து, வேம்பத்தூரினின்று மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்குக் கிடைத்த பாகவத வேட்டுப் பிரதிகளிலெல்லாம் நூலைப் பாடியவர் பெயர் முதலியன நன்குணர்தற்கேதுவான

கதிக்குமறு பிறப்பொழித்துக் கதிகொடுக்கும்
பாகவத கதையை முன்ன
மதிக்குமுயர் வடமொழியாற் புனைந்தருளவ்
வியாதமுனி வரனே மீள
வுதிக்கு நிம்பை மாதவபண் டிதச்செவ்வைச்
சூடியென வுலகு போற்ற
விதிக்குமறை யவர்குலத்திற் றோன்றியருந்
தமிழாலும் விளம்பி னனே.

என்னும் பாயிரப்பாட்டு வரையப்பட்டுள்ள தென்றும், இன்னும் அவ்வேம்பத்தூர்க்கண் சிறந்து விளங்கிய புலவர் நன்மக்கள் பெயர்களையும் அவர் செய்த பிரபந்தப் பெயர்களையும் விளங்க வுரைத்தற்கெழுந்த,

திருமருவு பஞ்சலக் கணவேலை பொங்கிச்
செழிக்குமிரு நிதிகொ ழிக்குந்
தென்னிம்பை நகரமதில் வாழுமந் தணரிற்
சிறந்தசெவ் வைச்சூடுவார்
சுருதிபுகழ் பாகவத பௌராண மோதினர்

* * *

என்னும் பழைய பாட்டுக் கர்ண பரம்பரை பற்றி வழங்குமென்றும் கூறுமுகத்தாற் செவ்வைச் சூடுவாரே 'விண்டு பாகவத புராணம்' பாடியவரெனக் காட்டினர்.

மற்றொன்று நெல்லி நகர் அருளாளதாச ரென்னும் மதுரகவி வரதராஜ ஐயங்கார் அருளிய ஸ்ரீமகா பாகவதம். இதில் முதற் புத்தகம் திரிசிரபுரம் மகாவித்துவான் கோவிந்த பிள்ளை அவர்களானும் பரங்கிப்பேட்டை இலட்சுமணப்பிள்ளை அவர்களானும் பார்வையிடப்பட்டுக் கி. பி. 1885-ல் அச்சிடப்பட்டது. இரண்டாம் புத்தகம் பவானி பாலபாரதி முத்துசாமி ஐயர், ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை, ல. வெ. திருமலை கொண்ட நாயக்கர் என்னும் மூவர் வித்துவான்களானும் பரிசோதிக்கப்பட்டுக் கி. பி. 1891-ல் அச்சிடப்பட்டது. ஆசிரியர் பெயர் முதலியன நூலுள் முதலாவது திருவரங்கப்படலத் திறுதியில் காணும் செய்யுள்கள் இரண்டால் விளங்குகின்றன. அவை வருமாறு:—

எதுகுலத்து வருமிறையோன் சரிதையைநற் சுகனிசையா
லுதவுசொலைத் தமிழினு லுரைத்தவன்வண் டிருவரங்கம்
பதியமர்வேத் திரக்கரத்தோன் பழமறையோன் வரதனெல்லிக்
கதிபதியா யுயர்ந்திடுபே ரருளாள நாதனரோ. (௧௫௩)

ஆயுமறை யோரெண்ண வருஞ்ச காத்த
மாயிரத்து நானூற்றே டறுபத் தஞ்சாந்
தூயசுப கிருதுதனின் முதன்மா தத்திற்
றுலங்குகுரு வாரத்துத் திராட நாளி
னேயமுட னெல்லிநகர் வரத ராச
னிகரிலரங் கத்திலர வணையி னேங்கு
நாயகன்முன் னறிஞர் மகிழ்ந் திடவே வாசு
தேவகதை யரங்கேற்றி நலனுற் றனே. (௧௫௪)

பிந்திய செய்யுளிற் குறித்த சகவாண்டுக்கு நேரான கிறிஸ்தவ வாண்டு 1542.

இவ்விரண்டாம் பாகவதத்தைப் பதிப்பித்தோர் முன்னுரை யாகப் பாகவத லட்சண மெழுதியுள்ளார். அஃது அவர்தாமே எழுதியது மன்று. ஆரிய மொழியில் கௌதம சங்கிதை யென வழங்கும் விரிந்த நூலில் கிரந்த லட்சண கண்டத்தில் முதலத்தி யாயம் பாகவத லட்சணம் என்னும் பெயரமைந்ததாம். மூலத்தை முன் பதிப்பித்துப் பின் தமிழ் மொழிபெயர்ப்பும் எழுதிவைத்த னர். பாகவதம் ஏழுண்டென அது கூறும். அவையாவன இதி காசம், புராணம், சம்மிதை, உபசம்மிதை, விஷ்ணு ரகசியம், விஷ்ணுயாமளம், கௌதம சம்மிதை என்பனவாம். இவ்வேழுள் முதலிரண்டுமே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்று அம்மொழி பெயர்ப்பாளர் கூறுவதால் ஆரிய மொழியில் மட் டுமே யுள்ள பாகவதங்களைப்பற்றி இங்கு விரித்தல் வேண்டா. முதலாவதாகிய இதிகாச பாகவதம் கஅ000 சுலோகங்களாக வியாச மகர்ஷியாற் செய்யப்பட்டது. அதிற் சுருதி கீதை முதலிய ௰உ கீதைகளும் எம்பெருமான் திருவவதாரங்களில் விஸ்தாரமாக நான்கு திருவவதாரங்களின் சரிதங்களும் அடங்கியுள்ளன. இப் பாகவதம் சூர்ணிகைகளாலும் விருத்தங்களாலும் பத்தியங்களா லும் வாக்கியங்களாலும் தண்டகங்களாலும் நிறைந்த கஉ ஸ்கந்தங் களையுடையது. ஒவ்வொரு அத்தியாயத்தின் ஆரம்பத்திலும் மத் தியிலும் பெரும்பாலும் அத்தியாய முடிவிலும் பகவத் ஸ்துதிக ளுண்டு. இதற்கு வக்தா [கூறினோர்] சுகமுனீந்திரர், சுரோதா [கேட்டோர்] பரீக்ஷித்து ராஜன். "புலவர் திலகராகிய ஆரியப்ப புலவரால் சகூள0 திருவிருத்தங்களாகத் தமிழில் மொழிபெயர்த் தருளப் பெற்றது இப்பாகவதமேயாம்."

இரண்டாவதாகிய புராண பாகவதம் ௩சு000 சுலோக முடையது. இதுவும் வியாசபகவானாற் செய்யப்பட்டதே. இதற்கு மகாபாகவத மென்று பெயர். இதில் உ௫ கீதைகளடக்கம். எம் பெருமான் திருவவதாரங்களில் ஆறு திருவவதாரங்களின் சரித்தி ரங்கள் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு

அத்தியாயத்திலும் பகவத் ஸ்துதியுண்டு. பெரும்பாலும் அநுஷ்டுப் சுலோகங்களாலும் பிறவற்ருலு மமைந்த அறுநூறு அத்தியாயங் களையுடையது. ஸ்கந்தம் என்னும் பகுப்பு இதில் இல்லை. தசா வதாரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதற்கு வக்தா நாரத பகவான் சுரோதா உருக்குமணிப்பிராட்டியார். "இதுவே அட்டா தசமகா புராணங்களுள் ஒன்ருகிய பாகவதம். இதனைச் சுமார் ௩௫0 வருஷங்களுக்கு முன் நெல்லி நகர் அருளாள தாசரென் னும் மதுரகவி வரதராஜ ஐயங்கார் ௬000 பாடல்களாகத் தமிழில் மொழிபெயர்த்தருளினர்."

இவ்விரண்டற்கும் பயன் முதலாவதற்கு ஞானத்தை யளித்த லென்றும் இரண்டாவதற்குப் பாவத்தை நீக்கலென்றும் உரைக்கப் பட்டுளது.

கௌதம சங்கிதை இவ்வாறு உரைத்ததாயினும்இக்காலத்தில் பதினெண் புராணங்களு ளொன்றென்று பெருவழக்காயிருப்பது பன்னிரண்டு ஸ்கந்தங்களையுடைய பாகவதமே. இதனை இதிகாச பாகவதமென்று சொல்வாரிலர். இதிகாசங்கள் இராமாயண மகா பாரதங்களே. சிவேதிகாசமாகிய சிவரகசியத்தையும் இதிகாச மென்று சொல்வதுண்டு.

ஆயினும் செவ்வைச் சூடுவார் பாகவதத்திற்கும் வரதராஜ ஐயங்கார் பாகவதத்திற்கும் வேற்றுமை காணப்படுகிறது. முன் னதில் ஸ்கந்தப்பகுப்புக்களும் ஸ்கந்தங்களுள் அத்தியாயங்களும் காணப்படுகின்றன. சுகர் பரீட்சித்துக் குரைத்தமை தெளிவாயி ருக்கின்றது. பின்னதிற் படலப் பகுப்புக்களே. படலங்களும் 132 உள்ளன. ஏழாவதாகிய கெசேந்திரன் மோட்சப்படல முதல் படலந்தோறும் நாரதர் உருக்குமணிப் பிராட்டியார்க் குரைத்தமை தெளிவாயிருக்கின்றது. ஆயினும் 65-வதாகிய படங்காண் படலம் 6 வது செய்யுளில் நாரதர் கண்ணன் புகழ்கள் கூறுறென்று உருக்குமணிதேவிக் குரைத்து 7-வதில் கண்ணன் உனை மணப்பார் என்றுரைத்து ஆசிகள் புகன்ருரென்றும், 8-வதில் உருக்குமணி தேவி 'முனிவனைப் பணிந்து நின்னிருக்கைக் சேறி யென வுரை

செய்து' கொழுநன் வரவை யெண்ணி வருந்தின ளென்றும் கூறப் பட்டது. இதற்குமேல் நாரதர் உருக்குமணி தேவிக்குக் கதை யுரைத்தலில்லை. இதனாலேயே இரண்டாம் புத்தகத்தை வெளியிட் டோர் முகவுரையில் " இச்சரித்திரங்களைக் கூறினார் நாரதபகவான் கேட்டார் உருக்குமணிப் பிராட்டியார். இதற்குத்தான் மகாபாகவ தம் என்று பெயர். பின்னர் இதனைச் சுகமுனிவர் கூறப் பரீட்சித் துக் கேட்டனன் என்க" என்றனர். முன் காட்டிய "எது குலத்து" என்னும் செய்யுளினும் ' நற்சுக னிசையா லுதவு சொலே' என்றது இக்கருத்தேபற்றி எழுந்ததாம். இன்னும் ஆசிரியரே திருவரங்கப் படலத்தில்

புகலரிய விறலபிமன் புதல்வனுக்கன் றருள்புரிந்து
சுகன்மொழியும் வடகலையை யான்றமிழாற் றெருடுத்து... (கசஅ)

எனவும்,

சுகனவன் பிதாவவன் றந்தை தூய்மையாற்
பகர்கதை... (கசசு)

எனவும்,

... மகபதிசேய்
மைந்தன்மகன் றனக்குவியா சன்குமரன் மால்சரிதை
யந்தமுட னமுதெனவே யருளியது மறையலுற்றேன் (கருரு)

எனவும் கூறியுள்ளார். சுகமுனிவர் சொல்லப் பரீட்சித்துக் கேட்ட னன் என்பதும் 128 வது படலம் வரையே பொருந்தும். 129 வது பரீட்சித்து மோட்சப் படலமும் 130 வது செனமே செயப் படலமும் 131 - வது கற்கிப்படலமும் பரீட்சித்துக்கு உரைத்தனவாகா. கற்கிப்படலத்திறுதியில்

நிகரில்வா ளபிமன் சுதனெழு தினத்தி
லிவரரி பதந்தனி லுறவே
சுகமுனி யருளத் துலங்குபா கவதப்
பொருளதாஞ் சுதைநல னுறவே
பகர்கதை யிதுவென் றுரைத்திடுஞ் சூதன்
றனையெங்கள் பவமுன்றன் சொல்லாற்
றகரநற் பதஞ்சேர்ந் துயர்ந்தன மெனவே
சவுனக ரொடுிந்தவ ருரைப்பார் (கடு)

ஆசகல் சுகனங்கோத வபிமனற் சுதன்றன் கேட்டு
மாசகல் வாசு தேவன் சரிதையை வரைந்து சீராய்ப்
பேசுவோர் கற்போர் கேட்போர் பெருமித மெய்திப் பின்னர்க்
கேசவ னடிய ராகிக் கிளர்பதத் தணுகு வாரே. (ருசு)

என்னும் செய்யுள்கள் புராணம் முடிந்ததைக் காட்டும். ஆயினும் 132 வதாக வைநதேயப்படலம் என்றொன்று 322 செய்யுளுடை யது காணப்படுகின்றது. பாகவத நூலுக்கும் அதற்கும் சம்பந் தம் அதிக மின்று.

முதற் புத்தகத்தில் 4664 செய்யுள்கள் கொண்ட 78 படலங்க ளும் இரண்டாம் புத்தகத்தில் 4483 செய்யுள்கள் கொண்ட 54 படலங்களும் காணப்படுகின்றன. ஆகச் செய்யுள்கள் 9147.

புராண பாகவத மென்றொரு நூல் வடமொழியில் வேருகப் பெருவழக்கா யில்லாமையால் வரதராஜ ஐயங்கார் பாகவதம் எவ் வளவில் வடமொழி நூலைத் தழுவிச் செய்யப்பட்ட தென்றுரைக்க வியலாது. ஆயினும் வரதராஜ ஐயங்கார் தமக்கு மூலமாகக் கொண்டது இப்பொழுது ஆரியத்தில் பாகவத மென வழங்குவ தன்று கௌதம சங்கிதை கூறுமாறு இதனில் விரிந்ததொன்றென் பது வெளிப்படை.

---

# சைவப்பெரியார் தனிக்கூட்டம்

இக்கூட்டம் திருநெல்வேலியில் 1929-வது வருடம் மார்ச்சுமீ 29, 30, 31-ந் தேதிகளில் மிகச் சிறப்பாகச் சைவத் திருவாளர் ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் **B.A., L.T. (Dy. Inspector of Schools)** தலைமையில் செவ்வனே நடைபெற்றது. தமிழ்நாட் டின் பல பகுதிகளாகிய தொண்டைநாடு, சோழநாடு, சேரநாடு, பாண்டிநாடு, நடுநாடு, கொங்குநாடு, ஈழநாடுகளிலிருந்தும் போந்த பல பேரறிஞர்களும், சைவசபைப் பிரதிநிதிகளும் குழுமியிருந்த னர். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக நிலையத்தில் விஷயாலோ சனைக் கூட்டமும் கணபதிவிலாச நாடகசாலையில் பொதுக்கூட்ட

மும் நடைபெற்றன. வந்திருந்த பேரறிஞர்கட்கும் பிரதிநிதிகட்கும் தங்குவதற்கான வசதிகளெல்லாம் சிறப்பாக அமைக்கப் பெற்றிருந்தன!

முதல்நாள் வெள்ளிக்கிழமை காலை, கூட்டத்துக்கு வந்த பேரறிஞர் அனைவரும் திருமுறை முழக்கத்தோடு ஸ்ரீநெல்லையப்பர் ஆலயத்தில் விதிப்படி வழிபாடு செய்து திருவீதி வலம் வந்தனர். பின்னர் மாலை மூன்றுமணிக்குக் கணபதிவிலாசக் கொட்டகையில் பல சபைகளின் பிரதிநிதிகள் ஆதரவுமொழி கூறிய பின்னர் தலைவர் அக்கிராசனத் தமர்ந்தனர். பின்னர் வரவேற்புக் கழகத் தலைவர் நல்வரவுப் பத்திரம் வாசித்தனர்.

தலைவர் இரண்டுமணிநேரம் மிக ஆர்வத்துடன் சைவசமயத்தின் இன்றியமையாத கோட்பாடுகளையும், அநுட்டானங்களையும் விரிவாக எடுத்து விளக்கி, சைவசமயம் நல்லொழுக்கத்துக்குப் பெரிதும் அரண் செய்யும் தன்மையுடையதென்றும், எல்லாச் சமயபத்தோராலும் சமரசக் கொள்கையுடன் வழிபடுதற் குரியதென்றும், ஆலயப் பிரவேசம் முதலிய சீர்திருத்த வழியிலும் நல்லொழுக்கம் உள்ள விடத்து மரபு வேற்றுமையின்றி எல்லாமக்களுக்கும் சம உரிமை கொடுக்கும் இயல்புடையதென்றும், இப்போது வெளிவரும் குறைபாடுகள் சைவத்திலில்லை; சைவ சமயிகளிடத்தே சிறுபான்மை காணப்படுமென்றும், திருவருள் நெறியே சைவத்திற் சிரமேற் கொள்ளும் பெருநெறியாக விளங்குவதென்றும் கூறி இப்போது சில பத்திரிகைகளின் பிரசாரத்தின் பலனுகச் சைவ உலகத்தில் ஏற்பட்டுள்ள பிளவும் நம்பிக்கைக் குறைவும் அறியாமையாலும் உண்மைச் சைவர்கள் உண்மைப் பிரசாரம் செய்யாத குறையினுலும் உண்டானவை என்றும் கூறினர். தலைவர் முன்னுரையின் விரிவு மற்றொரு இதழில் வெளிவரும்.

வெள்ளிக்கிழமை இரவும், சனிக்கிழமை பிற்பகல், இரவும் விஷய ஆலோசனைக் கூட்டம் கூடிப் பல சபைகளும், பேரறிஞரும் அனுப்பிய கருத்துக்களையும், ஆங்குக் குழுமியிருந்த பெரியார்களின் கருத்துக்களையும், தற்காலத்தில் சைவத்திற் குறைபாடு

கூறும் அறிஞர்களின் கருத்துக்களையும் மிகச் செவ்வையாக ஆலோசித்துக் கீழ்வரும் தீர்மானங்களை ஏகமனதுடன் நிறைவேற்றினர். இத்தீர்மானங்கள் சனிக்கிழமை காலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் கணபதி விலாசக் கொட்டகையில் சைவப் பொதுக் கூட்டத்தினருக்கு எடுத்து விளக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீநெல்லையப்பர் வசந்த மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதில் திருவாளர் ஏ. அரங்கசாமி ஐயர், கி. குப்புசாமி முதலியார், அ. மு. சரவணமுதலியார், திரு. வி, உலகநாதமுதலியார், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் முறையே "ஆலய அமைப்பு" "திருக்குறளும் சைவமும்" "மெய்ப்பொருள் நாயனர்" "சங்க நூல்களும் சைவமும்" என்பனபற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். இறுதியில் அனைவருக்கும் நன்றியுரையும், கடவுள் வாழ்த்தும் கூறிய பின் சபை இனிது கலைந்தது.

## தீர்மானங்கள்

1. "நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்னும் கொள்கை இன்றியமையாதது"

2. "சைவ சமயம் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருத்தமுள்ளதாயும் அன்பு நெறியினையே அடிப்படையாகக் கொண்டதாயும் இருத்தலின் அஃது எக்காலத்துக்கும் எச்சமுக நிலைக்கும் இசைந்ததாயிருக்கிறது."

3. "பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) என்னும் முப்பொருள் உண்மையையும்; அப் பதி சிவமே யென்பதையும் கடைப்பிடித்தல் சைவ சமயத்தின் கோட்பாடாகும்; சைவ உணவு கொள்ளுதல், சிவ சின்னங்கள் அணிதல் என்பவற்றோடு சரியை, கிரியை, யோகம், ஞானங்களில் அக்கோட்பாடுகட் கிசையப் பயிலுதல், சைவ சமயத்தின் அநுட்டானமாகும்."

4. "சைவ சமயத்துக்குப் பிரமாண நூல்களாவன:—பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களும், அவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும்."

5. சைவ சமயிகள், சைவசமயக் கோட்பாடுகளையும், அநுட்டானங்களையு மறுக்காத எவ்வித ஆராய்ச்சியுஞ் செய்தல் சைவ சமய விரோதமாகாது.

6. சைவ சமயிகளும், பிறருஞ் செய்யும் சமய ஆராய்ச்சிகளின் முடிபுகள் ஒப்புக்கொள்ளத் தக்கனவா அல்லவா என்று தீர்மானித்தற் பொருட்டுத் தனிக் கழகம் ஒன்று நிறுவி அதற்குரிய சைவ அறிஞர்

களைச் சைவ சித்தாந்த மகாசமாஜத்தார் ஆண்டுதோறும்தெரிந்தெடுக்க வேண்டும்.

7. சைவ சமயிகள் கடவுள் உண்டென்னும் கொள்கையைப் பாது காப்பதிலும், பொதுநலங் கருதிய அருளொழுக்கத்தைப் பரப்புவதிலும் தம்மோடு இணங்கிவரும் ஏனைச் சமயிகளோடு ஒத்துழைத்தல் வேண்டும்.

8. சைவ சமயமானது பிற சமயங்களைச் சோபான முறையில் தழுவுவதில்,சைவசமயிகள் பிறசமயிகளோடு சகோதரத்துவம் பாராட்ட வேண்டும்.

9. சைவ சமயிகளுள் சைவ ஆசாரமுடைய எம்மரபினர்க்கும் ஆலயவழிபாடு முதலிய சமய உரிமைகள் சமமாயிருத்தல் வேண்டும்.

10. ஆலயத்தில் சென்று வழிபடும் மக்கட்குக் கடவுள் சந்நிதியில் எவ்வகையான உயர்வு தாழ்வுகளும் பாராட்டப்படுதல் கூடாது.

11. பிற சமயத்தினர் சைவசமயக் கோட்பாடுகளையும், அநுட்டானங்களையும் ஒப்புக்கொண்டு சைவ சமயம் புகும் தமது விருப்பத்தை ஒரு சைவ சபையாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்தால் அச்சைவ சபையார் அவ்வறிவிப்பைப் பதிவு செய்துகொண்டு திருநீற்றுப் பதிகத்தையும் பஞ்சாக்கரப் பதிகத்தையும் ஓதுவித்துத் திருநீறு அணிவித்து அவர்களைச் சைவ சமயத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சமய உரிமைகள் அனைத்துக்கும் உரியராவார்கள்.

12. சைவசமய வளர்ச்சிக்கு வழிகளாவன்:—

(1) சைவ கலாசாலை ஏற்படுத்திச் சைவ சமய போதனை செய்வதற்குரிய பிரசாரகர்களைத் தயார் செய்தல்.

(2) அப்பிரசாரகர்களுக்குக் கோயில், மடங்கள், பெருஞ் சைவ சபைகள், செல்வர்கள் முதலியோர்களால் சம்பளம் அல்லது ஊதியங் கிடைக்கும்படி செய்தல்.

(3) ஆங்கிலத் தமிழ்க் கல்லூரிகளில் சைவ சமய மாணவர்க்கு அதிகாரிகளிடம் அனுமதிபெற்றுச் சைவசமய போதனை செய்வித்தல்.

(4) சமய நூல் பரிசோதனைகள் நடத்துதலும், தேறியவர்களுக்குப் பரிசளித்தலும்.

(5) சைவசமய உண்மைகளை விளக்கும் துண்டுப் பத்திரிகைகள் வெளியிடுதல்.

(6) தக்க புலவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் கூடிய கழக வாயிலாகச் சைவ சமயக் கோட்பாடுகளையும் அநுட்டானங்களையும் யாவர்க்கும் எளிதாய் நன்கு விளக்கும் உரைநடை நூல்களை வெளியிடுதல்.

(7) சைவசமய உண்மைகளை அறிவியல் நூல் கருத்துக்களோடும் பிறசமயக் கருத்துக்களோடும் ஒத்துப் பார்த்து ஆராய்ச்சிசெய்யும் சைவப் புலவர்களை ஆதரித்தல்.

(8) ஆங்கிலத்தில் ஒரு மாதாந்தரப் பத்திரிகை நடத்துதல்.

(9) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட சைவ சமயிகளுள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு சைவ சபையின் உறுப்பினராயிருக்கும்படி வேண்டிக்கொள்ளல்.

என்பனவும் இனைய பிறவுமாம்.

13. திருக்கோயிலில் செய்யவேண்டிய சீர்திருத்தங்களாவன:—

(1) பூசனை புரிவோர்களுக்குச் சைவ சமய உணர்ச்சி உண்டாதற்குரிய கல்வி பயிற்றுதல்.

(2) அவர்கட்குத் தக்க சம்பளம் அல்லது ஊதியம் கிடைக்கும்படி செய்தல்.

(3) சைவ சமயிகளைக் கொண்டே சிவாலயங்களில் வேதபாராயணம் முதலிய கைங்கரியங்கள் அனைத்தையும் செய்வித்தல்.

(4) தக்க ஆதி சைவர்கள் கிடையாத விடத்துத் தகுதியுடைய ஏனைச் சைவ சமயிகள் வாயிலாகப் பூசனைகளை நடத்துதல்.

(5) ஒவ்வொரு சிவாலயத்திலும் பன்னிரு திருமுறைகளைப் பூசைக் காலங்களிலே முறையாக ஓதுவித்தல்.

(6) ஆலயங்களில் நுழைந்துள்ள பிரவேசக் கட்டணம் முதலிய வழிபாட்டுத் தடைகளை நீக்குதல்.

(7) சைவ சமயக் கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணாகாத முறையில் நித்திய நைவேத்திய பூசைகளை நடத்துவித்தல்.

(8) திருவிழாக்களிலே பக்தி ஞானங்களைக் குன்றச் செய்யும் வீணாடம்பரச் செலவுகளை நீக்கிச் சிவத்துவம் விளங்குதற்குரிய திருமுறைப் பாராயணம், சமயப் பிரசங்கம், சைவ அறிஞர் கூட்டம் முதலியவைகளையே நிகழ்த்துவித்தல்.

(9) சிவாலயங்களிலே தேவதாசிகட்குப் பொட்டுக் கட்டுதலையும் அவர்கள் ஊழியத்தையும் ஒழித்தல்.

(10) திருக்கோயில்களிலும் தேர்களிலும் இப்பொழுது உள்ள இழிவான சிற்பங்களை ஒழித்தல்.

(11) சைவ சமய அறிவும் பற்றும் உடையவர்களையே கோயில் அதிகாரிகளாக நியமிக்கும்படி ஏற்பாடு செய்தல்.

(12) திருக்கோயில்களிலே திருக்குளம் முதலிய எவ்விடத்தையும் சுத்தமாக வைத்தல். புனிதத்திற்கும் பக்திக்கும் இடையூறாகிய கடை வைத்தல் முதலிய வழக்கங்களை ஒழித்தல்.

(13. நித்திய நைவேத்திய பூசனை முதலியனவற்றிற்குரிய செலவுகள் நிகழ்ந்தபின் எஞ்சிய நிதியினைக்கொண்டு சமயப் பிரசாரகர் நியமனம், சைவநூல் புத்தகசாலை, தேவார பாடசாலை, ஆகமபாடசாலை முதலியவற்றை ஏற்படுத்துதல். சிவாலய நிதியினைக்கொண்டு பிற சமயக் கல்விக்குப் பயன் படுத்தாதிருத்தல்.

(14) சிவாலயங்களிலே செய்யப்படும் வடமொழித் தென்மொழித் தோத்திரங்கள் அனைத்தும் சிவத்தைக் குறித்தனவாகவே இருக்கும்படி ஏற்பாடு செய்தல்.

என்பனவும் பிறவுமாம்.

14. சைவர்கட்குரிய சோடசகர்மம், தீக்ஷை வகைகள் முதலிய சடங்குகளும் சிவாலயத்தில் செய்யப்படும் கிரியைகளனைத்தும் சைவசமயிகள் யாவர்க்கும் தெளிவாக எளிதில் விளங்குதற்குரிய முறைகளை ஆய்ந்து கூறுதற்கும், சடங்குகள் செய்விக்கத் தகுதியுடையார் யாவர் என்று துணிதற்கும், அத்தகைய பிறவற்றைத் தீர்மானித்தற்கும், சிவானந்த சுவாமிகள், விருதை - சிவஞானயோகிகள், குளித்தலை - அரங்கசாமி ஐயர், கா. சுப்பிரமணியபிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஆகிய இவர்களை உறுப்பினராகக் கொண்ட அறிஞர் கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

15. ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சமய விஷயங்களிலே சம உரிமையும் கடமையும் உள்ளன.

16. உயிர்ப்பலி நிறுத்துதல், கொலை மறுத்தல் முதலிய அருளொழுக்கக் கொள்கைகளை (Vegetarianism) யாண்டும் பரவச் செய்தல் சைவ சபைகளின் கடமையாகும்.

17. சைவத் துறவிகட்கு சமயக் கல்வி பயிற்றுவித்து அவர்களை ஆதரிப்பதுடன், அவர்கள் வாயிலாக, சமயபோதனை செய்விக்கும் பொருட்டும், சைவ சமய வளர்ச்சிக்குரிய எல்லா முயற்சிகட்கும் பொருளுதவி ஆதரித்தற் பொருட்டும் செல்வ மிக்க சைவ மடங்களின் தலைவர்களை வேண்டிக்கொள்வதற்குத் தக்க அறிஞர்கள் சிலரைத் தெரிந்தெடுத்து அம்மடாதிபதிகளிடம் அனுப்பவேண்டும்.

18. சைவசித்தாந்த மகாசமாஜத்தை இந்நாட்டிலுள்ள சைவமக்கட்கெல்லாம் பொதுவாகிய சைவப் பெருஞ் சபையாகக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு தாலூகாவிற்கும் தனித்தனி சைவ சபைகள் சமைக்கப் பெறுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு தாலூகாவிலுமுள்ள பிற சைவ சபைகள் தாலூகாச் சைவ சபையின் கிளைச்சபைகளாகவும், ஒவ்வொரு ஜில்லாவிலு

முள்ள தாலூகாச் சைவசபைகள் ஜில்லா சைவ சபைகளின் கிளைக ளாகவும், ஜில்லா சைவ சபைகள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் கிளைகளாகவும் இருக்கவேண்டும்.

20. சைவ சமய வளர்ச்சிக்குரிய நன்னோக்கங்களும், நன்முயற்சி களும் நிறைவேறுதற் பொருட்டும், உலகம் நலமடைதற் பொருட்டும் சைவருள் ஒவ்வொருவரும் நாடோறும் இறைவனைப் பிரார்த்தனை புரித லுடன் சைவசபைகளிலும், கோயில்களிலும் வாரந்தோறும் சைவர் பலரும் ஒருங்குகூடி இறைவனை அன்புமிக்க மொழிகளால் வேண்டிக் கொள்ளுதல் கடமையாகும்.

## மேற்கண்ட தீர்மானங்களைப்பற்றிய விளக்கக் குறிப்புகள்.

1. மனித வாழ்க்கைக்கு நல்லொழுக்கமே சாலும், கடவுள் உண் டென்ற நம்பிக்கை தேவையில்லை யென்ற கொள்கையை மறுத்து அவ் வொழுக்கத்துக்கு இந்நம்பிக்கையே அடிப்படை யென்பது.

2. அறிவு குன்றிய காலத்துத் தோன்றிய சைவம் அறிவு மிக்க இக்காலத்துக்கு ஏற்றதன்று (obsolete) எனக் கூறுவதை மறுப்பதோடு அன்பு நெறியே (universal love) அடிப்படையாதலின் சைவம் அனை வரும் எக்காலத்தும் கொள்ளும் தகுதியுடைய தென்பது.

3. இத்தீர்மானத்திற் கண்ட கோட்பாடும் அநுட்டானமும் உடையவனே சைவன். முப்பொருள் உண்மையைப் பிரமாண நூல் களிற் கூறப்பட்ட முறையில் கொள்ளவேண்டும். கோட்பாடுகட் கிசை யப் பயிலுதல் அநுட்டானத்தின் அடிப்படை.

4. பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களும் பிர மாண நூல்கள் என்றமையால் அவைகட்கு முன் சைவம் இல்லையென் பது இத்தீர்மானத்தின் நோக்கமாகாது. சில நூற்றாண்டுகட்கு முன் தோன்றிய இவைகள் அதுவரைத் தோன்றிய பல கொள்கைகளை ஆய்ந்து முடிபு கூறுதலின், இவைகளே சிறந்த பிரமாணங்களாகும். இவைகளின் கருத்துக்கு மாறுபடாத வேத சிவாகமப் பகுதிகள் என்ற மையான், மாறுபட்ட பகுதிகளும் இருத்தல் கூடும் என்பது பெற்றாம். எனினும், எல்லாப் பகுதிகளும் மாறுபடாதனவே என விளக்குதல் இத் தீர்மானத்துக்கு முரணாகாது, அரணே செய்யும்.

5. கோட்பாடுகளையும் அநுட்டானங்களையும் மறுத்து அவை அறிவுக்குப் பொருத்தமில்லை, இழிவுள்ளன என்று பிதற்றாது அவை களை மறுக்காத வகையில் எவ்வித சமய, சரித, இலக்கிய ஆராய்ச்சியும் செய்தல் சைவசமய விரோதமல்ல வென்பது.

6. இத்தீர்மானத்திற்கண்ட கழகம் சைவரும் பிறரும் செய்யும் ஆராய்ச்சி முடிபுகளை நன்காய்ந்து அவைகளிற் கொள்ளும் பகுதி தள்ளும் பகுதிகளைச் சைவ உலகத்துக்கு எளிதில் விளக்கும் பொறுப்புடையது. பேரறிஞர் (Experts) நிறைந்துள்ள இக்கழகம் கூறுவதை அனைவரும் ஐயமின்றி ஒப்புக் கொள்ளலாம்.

7. இத்தீர்மானம் ஆஸ்திகத்தையும் அருளொழுக்கத்தையும் பாதுகாத்துப் பரப்புவதில் ஏனைய சமயிகளோடு ஒத்துழைத்தல் சைவர்களின் கடன் என்று கூறும்.

8. சர்வமத சகோதரத்துவம் பாராட்டுதல் வேண்டுமென்றும் அச்சகோதரத்துவம் சைவத்தின் சோபான முறையில் அடங்கியுள்ளதென்றும் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது. சமயப் பொறையும் இதில் அடங்கும்.

9. நான்கு வருணங்கள், தீண்டாமை, முதலிய காரணங்களால் ஆலய வழிபாடு முதலிய பலவகைகளிற் காணப்படும் சமய உரிமை வேற்றுமைகளை ஒழிக்கும் நோக்கமுடையது இத்தீர்மானம். சைவ ஆசாரமுடைய சைவ சமயிகட்கே ஒத்த சமய உரிமைகள் என்பதால் சைவ ஆசாரமின்மையும் பிற சமயச் சார்பும் சம உரிமைகளைத் தரமாட்டா என்பது விளங்கும். உதாரணமாக சைவ ஆசாரமில்லாத சைவ சமயிக்கும், சைவ ஆசாரமுடைய புத்தனுக்கும் சமய உரிமைகள் கிடையா.

10. ஆலயத்தில் அந்தராளம், மகா மண்டபம் முதலிய விடங்களிற் செல்லும் உரிமை வேற்றுமை விபூதி முதலியன பெறுதலில் முன்பின் என்ற வேற்றுமை முதலியவைகளை ஒழிக்கும் நோக்கமுடையது.

11. பிற சமயத்தினர் என்றமையால் சைவத்திலிருந்து பிற சமயம் புக்கோர் பிற சமயத்திலேயே பிறந்தோர் என்ற இருவகையும் அடங்கும். எழுத்து மூலமாய்த் தெரிவித்துப் பதிவு செய்தல் சமய மாறுதலை நீதிமன்றம் முதலிய இடங்களிற் காட்டுதற் பொருட்டே. பதிகங்களை ஓதித்திருநீறணிவித்து, சைவத்திற் சேர்த்தல் என்றலால் கழுவாய் (பிராயச்சித்தம்) வேறு ஒன்றும் இல்லை என்று தெளிக. தமது விருப்பத்தைத் தெரிவித்தல் என்றலால் விரும்பி மாறுதலே (Voluntary conversion) யொழிய வலிந்து மாற்றுதல் (forced conversion) என்பது கூடாதென்பது பெற்றும்.

12. இத் தீர்மானத்திற் கூறியுள்ளன வெளிப்படை.

13. (1) அதாவது, பன்னிருதிருமுறை, பதினான்கு சாத்திரம், வேதம், சிவாகமம் முதலியன கற்பித்தல்.

(2) அதாவது வணங்க வருவவோரிடத்து எதிர்பார்த்து வலிந்து கொள்ளாத வகையில்.

(3) அதாவது சைவசமயிகளாகாத ஸ்மார்த்தர் முதலியோரின்றி ஆதிசைவருள்ளிட்ட சைவசமயிகளைக் கொண்டே வேதபாராயணம், பரிசாரகம், மணியம் முதலியவை செய்வித்தல்.

(4) கிடைத்த விடத்து ஆதிசைவரே நடத்தல் வேண்டும் என்பது உட்கருத்து. ஏனைச் சைவசமயிகள் என்பதற்கு மேற்கூறியதை நோக்குக.

(5) இது பூசையின் இன்றியமையாத அங்கம் ஒன்றை வலியுறுத்துகிறது.

(6) வழிபாட்டுத் தடைகளாகையால் வேறு எக்காரணம் கூறியும் இவைகளை வைத்தல் கூடாது.

(7) நித்திய நைமித்திய பூசை நடை முறையில் சைவசமயக் கொள்கைகட்கும் சிவாகம விதிகட்கும் முரணுகக் காணும் பல விவரங்களையும் சீர்திருத்தும் நோக்க முடையது இத்தீர்மானப் பகுதி. உதாரணமாக ஆறுகால பூசைகளிற் சிலகாலங்களில் விநாயகருக்கு இறுதியில் அபிஷேகம் தூபதீபம் முதலியன செய்தல், சண்டேசுவரருக்குப் பூசை செய்யாது விடுதல் முதலிய எண்ணிறந்த விவரங்கள் இதன்கண் அடங்கும்.

(8) வாகனங்களிலும் சுவாமியின் மேற்சாத்தும் பூமாலைகளிலும் எலெக்டிரிக் விளக்குகள் வைத்தல், வர்த்தக விளம்பரங்கள் முதலியன விளக்கும் வாகன வேடிக்கைகள், சதிர்க்கச்சேரி, மேளக்கச்சேரி, முதலியன வீணுடம்பரச் செலவுகளாகும். இவைகளை யறவே யொழித்துத் திருமுறை பாராயணம், சைவப்பிரசங்கம், அறிஞர் கூட்டம் முதலியவைகளை நடத்துதல் திருவிழாவின் இன்றியமையாத சிறப்பங்கம் என்று வலியுறுத்துவது இப்பகுதி.

(9) இப்போது வந்துள்ள சட்டத்தின் குறைபாட்டை விளக்குவது.

(10) நிர்வாண மக்களுருவங்கள் மெய்யுறு புணர்ச்சி யுருவங்கள் முதலியன கோபுரங்களிலும், தேர்களிலும், மண்டபக் கால்களிலும் சிற்பமாகவும், பிரகாரங்களிலும் திருமதில்களிலும் ஓவியமாகவும் பல சிவாலயங்களில் இன்றும் காணப்படும். இவைகளை அறவே ஒழித்தல் வேண்டும்.

(11). உடையவர்களையே என்பதால் ஏனையோர் கூடாது என்பது பொருள்.

(12) கடை வைத்தல் முதலியன என்பவற்றுள் சிட்டுக்குருவி லேகியம், சீர மர்மசாஸ்திரம், மதனபாண லேகியம் முதலியன பற்றிய விளம்பரங்களும் திருவிழாக்களிலும் கூடாதென்பது கருத்து.

(13) "உரிய செலவுகள்" என்பதால் ஆடம்பரத்தை யொழித்த வகையில், தேவையான அளவு என்று துணியவும். பிற சமயக் கல்விக்குப் பயன்படுத்தா திருத்தல் என்பது இராமேச்சுரம் தேவஸ்தானத்தார் வடமொழிக் கலாசாலை வைத்து, சங்கர வேதாந்தம் கற்பித்தலைக்

கண்டித்து அதை ஒழிக்கும் நோக்கமுடையது. இராமேச்சுரத்தைப் போல் வேறு பல இடங்களிலும் இருத்தல் கூடும்.

(14) வேத பாராயணத்தில் இந்திரன் முதலிய தேவர்களுக்கு ஆடு முதலியவைகளைப் பலி கொடுப்பதாகக் கூறும் பகுதிகளை நீக்கிச் சிவத்தைக் குறித்த பகுதிகளையே ஓதுவித்தல் இதன் நோக்கம்.

14. அதிகாரி, ஆசாரியர், செயல், வகை முதலியவைகளைத் தீர்மானித்தற்கே இக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இது 10-5-1929-க்குள் தமது அறிக்கையை சைவ மகாநாட்டுக்கு அனுப்பி வைக்கும்.

15. சைவப் பெண்டிர்க்குச் சம உரிமையும் கடமையும் சைவ சமயத்தில் இல்லையென்பார் கூறுவதை மறுத்து உண்மையுரைப்பது இத்தீர்மானம்.

16. இத்துறையில் ஏனைய சமயிகளோடு சைவர்கள் ஒத்துழைத்தல் வேண்டப்படும்.

17. இவ்வறிஞர்கள் திருப்பாதிரிப்புலியூரில் சைவ மகாநாடு முடிந்தவுடன் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார் கோயில், குன்றக்குடி, மதுரை இவ்விடங்களிலுள்ள செல்வமிக்க சைவப் பெருமடங்கட்குச் செல்வர். இவ்வறிஞர்கள் கூறுவதை அம்மடாதிபதிகள் ஒப்புக்கொண்டு பொருளுதவி புரிந்து திருப்பணியும் செய்யத்தொடங்குவர் என்று எதிர்பார்க்கிறோம்.

18. இத்தீர்மானம் சைவசித்தாந்த மகா சமாஜத்தைத் தலைமைச் சைவக் கழகமாக்கும் நோக்க முடையது.

19. சமத்துவத்தை (Federal Basis) அடிப்படையாகக் கொள்ளும் வகையில் தாலுகா ஜில்லாச் சபைகளை நிறுவுதல் இதன் நோக்கம்.

20. ஒவ்வொரு சைவரும் தனித்தும் சேர்ந்தும் பிரார்த்தனை (Individual and Congregational Prayer) செய்வதின் சிறப்பையும் அதனால் பயன் விளையும் என்ற உண்மையையும் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது.

இந்தத் தீர்மானங்களைச் செவ்வனே ஆராய்ந்து ஒவ்வொரு சைவரும், சைவ சபையும் தமது கருத்துக்களை விரிவாக 1-5-29-க்குள் ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம், 150 கோவிந்தப்பநாய்க்கன் தெரு, சென்னை, என்ற விலாசத்துக்குத் தெரிவிக்கவேண்டும். 1929ளு மேமீ 17, 18, 19, 20 தேதிகளில் மேற்கண்ட தீர்மானங்களையும் அவற்றைப் பற்றி வரும் கருத்துக்களையும் ஆலோசித்து முடிபுகள் காணத் திருப்பாதிரிப் புலியூரில் ஒரு சைவ மகாநாடு நடைபெறும். அதன் நடை முறை விவரங்கள் பின்னர் வெளிவரும்.

---